Follow us:

# தமிழன்

THAMILAN தமිළන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 219 சோபகிருது வருடம், சித்திரை மாதம் 13ஆம் திகதி புதன்கிழமை
(26.04.2023) ஹிஜ்ரி 1444, ஷவ்வால் - 05, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## அரசுக்கு ஆதரவா?

ஒழுக்காற்று நடவடிக்கைக்கு ஐ.ம.ச. தீர்மானம்

02 பக்கம்

## கப்பலுக்காக இலஞ்சம் பெற்ற நபர் யார்?



சபையில் அம்பலப்படுத்தினார் அமைச்சர் விஜயதாச

02 பக்கம்

## வடக்கும் கிழக்கும் ஹர்த்தாலால் முடக்கம்



யாழ்ப்பாணம் (படம்: யாழ். செய்தியாளர்)

•வடக்கு, கிழக்கு மாகாண செய்தியாளர்கள்

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராகவும் திட்டமிட்ட நில அபகரிப்பு, தொல்லியல் மரபுரிமைகளை சிதைத்தல் ஆகியவற்றைக் கண்டித்தும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நேற்று (25) முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தால் காரணமாக அனைத்துப் பகுதிகளும் முடங்கின.

அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வர்த்தக சங்கத்தினர் என அனைத்துத் தரப்பினரும் இதற்கு ஆதரவளித்ததால் அரச நிறுவனங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதுடன், பொதுப் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது.

(செய்திகள், புகைப்படங்கள் 07, 08ஆம் பக்கங்களில்)

## முதல் காலாண்டில் ரூ.317 மில்லியன் வருமானம்




•நா.தினுஷா

நடப்பாண்டின் முதல் காலாண்டில் நாட்டுக்கு 316.61 மில்லியன் ரூபா மொத்த வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாக இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த வருமானம் கடந்த ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய மூன்று மாதங்களிலேயே ஈட்டப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் டீ.ஆர்.எஸ்.ஹப்புஆராச்சி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, 02 பக்கம்

# ‘புலியால்’ சர்ச்சை!



“சாணக்கியன் கொட்டியா” என்ற அமைச்சர் மனுஷவின் பேச்சால் சபையில் அமளி



•நமது நிருபர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனை வெளிநாட்டு வேலைவாய்ப்பு... 02 பக்கம்

## அரசின் இனவாத முகம் மீண்டும் வெளிப்பட்டது

சுமந்திரன் எம்.பி. சபையில் காரசாரப் பேச்சு



•கே. சுபானி

“வடக்கு - கிழக்கிலிருந்து ஏதாவது ஒரு கேள்வியை கேட்பதாக இருந்தால் உடனடியாக பயங்கரவாதி என்று முன்வரிசையிலுள்ள அமைச்சரே உச்சரித்து சொல்கிறார். அந்தளவுக்கு இனவாத முகத்தை இப்பொழுதும் வெளிப்படையாக... 02 பக்கம்

## விடைத்தாள் திருத்தும் பணி இவ்வாரம் ஆரம்பம்

•நா. தினுஷா

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் இந்த வாரத்துக்குள் ஆரம்பமாகுமென்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் நேற்று (25) தெரிவித்தார்.

சபையில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சியினர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்ததாவது,

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கை தொடர்பிலான பிரச்சினையை கடந்த இரு மாதங்களுக்கு முன்னரே நான் கவனத்தில் கொண்டிருந்தேன். 02 பக்கம்

## திருத்தம் மேற்கொள்ள அரசாங்கம் தயார்

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் அமைச்சர் பந்துல தெரிவிப்பு



•நா.தினுஷா

அப்பாவி மக்களையும் அவர்களின் சொத்துகளையும் பாதுகாத்து தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி, பயங்கரவாதமற்ற நாட்டை உருவாக்குவதே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் நோக்கமாகும். இதில் மறைக்கப்பட்ட நோக்கங்கள் எதுவும் இல்லாததால் தேவையான திருத்தங்களை,... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...

தமிழன் என்னதான் இந்த நாட்டின் மீது தேசப்பற்றை அள்ளிக்கொட்டினாலும் அவன் கொட்டியா தான்...



## ரணிலின் எச்சரிக்கை மிகப்பெரிய நகைச்சுவை

விரிவுரையாளர்களுக்கு எதிரான நடவடிக்கையை சுட்டிக்காட்டி ரோஹினி எம்.பி. பரிகாசம்



•எம். எஸ். எம். மஸாஹிம்

இலங்கையில் பரீட்சைத் திணைக்களமும் கல்வித் திணைக்களமும் இரண்டு பிரிவுகள் என்பதை இதுவரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புரிந்துகொள்ளாமல் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணியில் ஈடுபடாத ஆசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போவதாகவும், அவர்களின் சொத்துகளை அரசுடைமையாக்கப்போவதாகவும் எச்சரிப்பது 2023ஆம் ஆண்டின்... 02 பக்கம்

## சூடானில் இலங்கையரை மீட்க இந்தியா உதவி



சூடானில் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்றுவரும் நிலையில், அங்குள்ள இலங்கையரை மீட்க இந்தியா உதவி புரிந்துள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி நேற்று (25) தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ட்விட்டரில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சூடான் நிலைவரம் தொடர்பில் அவதானித்து வருகிறோம். அங்குள்ள இலங்கையரின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம். இந்த விடயத்தில் இந்தியாவின் உதவி பாராட்டத்தக்கது. இன்னும் ஒருசில வாரங்களில் நிலைமை சீராகுமென நம்புகிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

### உஷ்



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் பாதிப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யாமலிருக்க கோடிக்கணக்கில் இலஞ்சம் பெற்ற சிலர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு மிகவும் நெருக்கமானவர்களாம்.

கோட்டாவின் காலத்தில் அவருக்கு நெருக்கமாக இருந்த ஜனாதிபதி செயலக அதிகாரிகள் சிலரும் இதில் சம்பந்தப்பட்டுள்ளனராம்.

இந்த விடயத்தை மூடிமறைக்க திரைமறைவில் முயற்சிகள் எடுக்கப்படுகின்றதாம்.


அதிதுரித

Dialog HOME BROADBAND

வீட்டிற்கு Wi-Fi ரீலோட்




இணைப்புடன் ரவுட்டர் ரூ.5990/-

மாதத்திற்கு 20GB ரூ.540/-

2 வாரங்களுக்கு 10GB ரூ.299/-

செயற்படுத்தல் ரீலோட் அல்லது MyDialog App மூலம்

Dialog

எதிர்காலம் இன்றே.

# ஈஸ்ரர் தாக்குதல் விசாரணை அறிக்கை ஆயர் பேரவைக்கு

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கை கத்தோலிக்க ஆயர் பேரவையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஒப்புதலுடன் அமைச்சர் டிரன் அலஸ் அறிக்கையின் பிரதியொன்றை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் அருட்தந்தை ஹெரோல்ட் அந்தோனி பெரேராவிடம் கையளித்துள்ளார்.

# கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தீர்க்கமான முறை உருவாக்கம்

## ஜனாதிபதி ரணில் அமைச்சரவையில் அறிவிப்பு

நா. தினுஷா

கடன் மறுசீரமைப்புத் தொடர்பான கலந்துரையாடல்களில் அடுத்த மாதமாகும்போது ஏதாவதொரு தீர்க்கமான முறையொன்றை உருவாக்கக் கூடியதாக இருக்குமென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் (24) இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போது தெரிவித்திருக்கிறார்.

அதற்கமைய, மே மாதத்தின் பின்னர், வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் சாதகமான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கக் கூடியதாக இருக்குமென அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (25) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிருக்கும் செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடன் மறுசீரமைப்பே நாட்டிலுள்ள பிரதான பிரச்சினையாகும். அதுதொடர்பான கலந்துரையாடலுக்காக பிரான்ஸ் - லசாட் நிறுவனம், சட்ட நடவடிக்கைகள் குறித்து கிளிபர்ட் லோ நிறுவனம், இந்தியாவின் நிதி அமைச்சர், பிரான்ஸின் நிதி அமைச்சர், ஜப்பான் நிதி அமைச்சர் உள்ளிட்டோருடனும் சூம் தொழில்நுட்பத்தினூடாக கலந்துரையாடியதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இவர்களுடன் பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பரிஸ் கிளப்புடனான பேச்சுவார்த்தைகளிலும் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். இருந்தபோதும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, இலங்கை மத்திய வங்கி, நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் கடன் தொடர்பான விசேட நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனங்களினால் எதிர்வரும் மே மாதமாகும்போது, கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஏதாவதொரு முறையை உருவாக்கிக்கொள்ள முடியுமென்று ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார்.

இதுவே எமது நாட்டில் இருக்கும் தீர்த்துக்கொள்ளக்கூடிய பாரதூரமான பிரச்சினையாகும்.

எது நாட்டில் சிறியளவான பொருளாதாரமே இருக்கிறது. 80 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கொண்ட பொருளாதார நிலைமையில் 50 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிக தொகை கடன் மீள் செலுத்தவேண்டியுள்ளது என்றார்.

### திருத்தம் மேற்கொள்ள...

உரிய முறையில் மேற்கொள்ள அரசாங்கம் தயாராக இருப்பதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (25) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் மகாசங்கத்தினர், ஏனைய தேசிய அமைப்பினர் உள்ளிட்ட சகல தரப்பினரும் ஏதாவது திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கோருகிறார்கள் என்றால், அதற்கேற்ப திருத்தங்களை மேற்கொள்ள முடியும் என்று நீதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிலுள்ள அப்பாவி மக்களையும் அவர்களின் சொத்துகளையும் பாதுகாத்து தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும், பயங்கரவாதமற்ற நாட்டை உருவாக்குவதுமே இந்த சட்டமூலத்தின் நோக்கமாகும். அதுவே அமைச்சரதும், அரசாங்கத்தினதும் நிலைப்பாடாக இருக்கிறது.

அதற்கமைய, இதில் மறைக்கப்பட்ட நோக்கங்கள் எதுவும் இல்லாததால் தேவையான திருத்தங்களை, உரிய முறையில் மேற்கொண்டு அதனை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

### 'புலியால்' சர்ச்சை!...

அமைச்சர் மனுஷ நாணயக்கார 'புலி' எனக் குறிப்பிட்டதால் சபையில் நேற்று (25) கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

"இதோ புலி வெளியில் செல்கிறது என சாணக்கியன் எம்.பி.யை சுட்டிக்காட்டிய அமைச்சர் மனுஷ, சாணக்கியனும் அவர் சார்ந்தோரும் இனவாதிகள் என்றும் அவர்களே வடக்கு மக்களின் பிரச்சினைகளின் தீர்வுக்கு தடையாக இருப்பதாகவும் மிக ஆவேசமாக பேசினார். அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியதையடுத்து அவ்வாறான சொல்லாடல்களை ஹன்சார்ட்டிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்குமாறு சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த அறிவித்தார்.

பாராளுமன்றம் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது. வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் கேள்வியொன்றை கேட்பதற்கு சாணக்கியன் எம்.பி. அனுமதி கோரினார்.

கேள்வி கேட்பதற்கான நேரத்தை எனக்கு நீங்கள் வழங்கவில்லை. இன்று காலையிலிருந்து ஏனையோருக்கு சந்தர்ப்பம் அளித்தீர்கள். எனக்கு நேரம் தரவில்லை. இப்படியான காரணத்தினால் தான் வடக்கு, கிழக்கில் இன்று (நேற்று) ஹர்த்தால் முன்னெடுக்கப்படுகிறது என அவர் தெரிவித்தார்.

அத்துடன் போக்குவரத்து அமைச்சரிடம் கேள்வியொன்றை முன்வைக்க முற்பட்டபோது, வாய்மூல விடைக்கான கேள்வி நேரம் நீண்டு சென்றுள்ளதாக சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த சாணக்கியன் எம்.பி., தனக்கு நேரம் வழங்காமை குறித்து அதிருப்தியை வெளியிட்டார்.

"நீங்கள் சத்தமாக கதைக்கிறீர்கள் என்பதற்காக நான் பயப்படமாட்டேன்" என பிரதி சபாநாயகர் அதற்குப் பதிலளித்தார்.

அதன் பின்னர் எழுந்த போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, பாராளுமன்றத்தை முன்னெடுத்துச் செல்ல முறையொன்று இருக்கிறது. நினைத்த கேள்விகளுக்கெல்லாம் இங்கே பதிலளிக்க முடியாது என்றார்.

அதன்பிறகு சாணக்கியன் எம்.பிக்கு நேரம் வழங்குவதற்கு பிரதி சபாநாயகர் மறுப்பு தெரிவித்தார்.

சபையில் கேள்வியொன்றுக்கு பதிலளிப்பதற்காக எழுந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, அவசியமற்ற கேள்விகளைக் கேட்டு நேரத்தை வீணடிப்பதாக குற்றஞ்சுமத்தினார். அதன்போது அமைச்சருக்கும் சாணக்கியன் எம்.பிக்கும் இடையே சபையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

"நான் நேரத்தின் பெறுமதி பற்றித்தான் கூறினேன். இராசமாணிக்கமோ அல்லது யாருக்கோ நான் சொல்லவில்லை. தொப்பி அளவென்றால் போட்டுக்கொள்ளுங்கள்" என அமைச்சர் கூறினார்.

சாணக்கியன் தொடர்ச்சியாக விட்டுக்கொடுக்காமல் பேசியதால் ஆத்திரமடைந்த மனுஷ நாணயக்கார, பைத்தியக்காரனைப் போல செயற்பட வேண்டாம் என ஆவேசமாகக் குறிப்பிட்டார்.

இந்நிலையில் சாணக்கியன் எம்.பி. சபையிலிருந்து வெளிநடப்பு செய்தார். அதன்போது ஆத்திரமடைந்த மனுஷ நாணயக்கார, இதோ புலி வெளியில் சென்றுவிட்டது. இதுதான் அவர்களது குணம். நாங்கள் தமிழர்களா, முஸ்லிம்களா என பிரித்துப் பார்ப்பதில்லை. நேரத்தைப் பற்றி நான் பேசினேன். ஆனால் கிழக்கைப் பற்றிக் குறிப்பிட்டதால் நேரம் ஒதுக்கப்படவில்லையென அவர் கூறுகிறார். இதைத்தான் அவர்கள் அரசியலுக்குப் பயன்படுத்துகிறார்கள். இதுதான் இனவாதத்தை உபயோகப்படுத்தும் முறை. இவர் தான் இனவாதி. இவர்கள்தான் வடக்கில் பிரச்சினையை உருவாக்கினார்கள். பிச்சைக்காரனின் பாத்திரத்தைப்போல பிரச்சினையை வளர்த்து, அதன் மூலம் உண்கிறார்கள். வடக்கில் பிரச்சினையை தீர்க்கவிடாமல் இவர்கள் தான் இலாபமடைகிறார்கள் என்றார்.

அதன்பின்னர் எழுந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இந்த சபையில் புலி என்று எம்.பியொருவரை அமைச்சர் குறிப்பிடுகிறார். அக்கிராசனத்தில் அமர்ந்திருக்கும் நீங்கள் அதைக் கேட்டும் அமைதியாக இருக்கிறீர்கள். இந்த அரசாங்கத்தின் இனவாத முகம் இந்தப் பாராளுமன்றத்தில் வெளிப்பட்டுவிட்டது.

சபையின் முதல்வர் இங்கிருக்கிறார். இது மிகத் தீவிரமான பிரச்சினையாகும். நீங்கள் (சபை முதல்வர்) இதற்கு அனுமதியளிக்கிறீர்களா? ஓர் அமைச்சர் மற்றுமொருவருக்கு புலி எனக் கூறுவதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, அவ்வாறானதொரு வார்த்தைப் பிரயோகம் இடம்பெற்றிருக்குமானால் ஹன்சார்ட்டிலிருந்து அதை நீக்குங்கள் என்றார்.

### அரசுக்கு ஆதரவா?...

நா. தினுஷா

எதிர்க்கட்சியிலிருந்து அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க நேற்று முன்தினம் (24) இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கூட்டத்தின்போது அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

அந்த செயற்பாடுகளுக்காக நிலையான ஒழுக்காற்று குழுவொன்றை நியமிக்கவும் இதன்போது தீர்மானம் எடுக்கப்பட்டதாக அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்தார்.

ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள உறுப்பினர்களில் யாராவதொரு நபர் விதிகளை மீறுவாரானால், சம்பந்தப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கையினூடாக விசாரணைக்கு உட்படுத்தியே தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், அடுத்தக்கட்ட பாராளுமன்ற செயற்பாடுகள் குறித்தும், ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

### முதல் காலாண்டில்...

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் கடந்த 2022ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் 146.56 மில்லியன் ரூபா வரி வருமானம் திரட்டப்பட்டுள்ளது. அதனுடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தின் முதலாவது காலாண்டில் 316.61 மில்லியன் ரூபாவாக வரி வருமானம் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு கடந்த வருடத்தின் முதலாவது காலாண்டுடன் ஒப்பிடும்போது நூற்றுக்கு 216 வீத அதிகரிப்பாகும்.

அரசின் புதிய வரிக் கொள்கையை போன்று, நாட்டின் பொருளாதார செயற்பாடுகள் வழமைக்கு திருப்பியமை மற்றும் வரி நிர்வாகத்தின் செயலாற்றுகையை அதிகரித்தமை ஆகியன இவ் வரி வருமான அதிகரிப்புக்கு காரணமாக அமைந்தது என்பது தெளிவாகிறது.

எவ்வாறாயினும், கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து பாதுகாப்பு உதவுதொகை அறவீடு செயற்படுத்தப்பட்டமையினால் 2022ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டு தொடர்பில் அது ஏற்புடையதாகாது. அதேபோன்று, பங்கு கொடுக்கல் வாங்கல் வரி குறைவடைந்தமை தொடர்பாக பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட வீழ்ச்சியும், ஏனைய வரிகள் குறைவடைவதற்கு பொருளாதார சேவை கட்டணம், தேசத்தை கட்டியெழுப்புவதற்காக வரி மற்றும் கடன் மீளளிப்பு வரி என்பன இரத்து செய்யப்பட்டமைக்கு தாக்கம் செலுத்தியுள்ளது.

ஆனால், இந்த ஆண்டின் முதல் காலாண்டுக்கான வரி வருவாயின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை பெற்றுக்கொள்வதற்காக பங்களிப்பை வழங்கிய அனைத்து வரிச் செலுத்துனர்களுக்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றது. அதேபோன்று, வினைத்திறனானதும் பயனுள்ளதுமான வரி முகாமைத்துவ சேவையை வரிசெலுத்தும் மக்களுக்கு வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்கும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### ரணிலின் எச்சரிக்கை...

மிகப்பெரிய நகைச்சுவையாகும் என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி கவிரத்ன தெரிவித்தார்.

மாத்தளை கைக்காவெலவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

ஒரு மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எதேச்சதிகார கருத்தையும் தான்தோன்றித்தனமான முடிவையும் முற்றிலும் நிராகரிக்கின்றேன்.

தற்பொழுது நாட்டில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கக்கூடிய பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு கட்டாயமாக திணிக்கப்பட்டுள்ள வரிநிபந்தனையும் ஆசிரியர்கள் முகங்கொடுத்துள்ள சம்பள முரண்பாடுகளும் விடைத்தாள்கள் திருத்தப்படாமல், பாடசாலை மாணவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் என்பன இன்று நாடளாவிய ரீதியில் விஸ்வரூபம் எடுத்துள்ளன.

இந்த இரண்டு விடயங்களையும் ஒன்றாக இணைத்துக்கொண்டு பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் அரச ஆசிரியர்களும் அப்பாவி மாணவர்களை பழிக்கடாவாக அல்லது பணயக்கைதிகளாக வைத்து செயல்படுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். மேற்படி இரண்டு கூட்டத்தாரினது அல்லது குழுக்களினது செயல்பாட்டினால் அப்பாவி பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டு அவர்களின் வயதும் காலமும் வீணாக இழுத்தடிக்கப்படுகின்றது. என்பதை மேற்படி விரிவுரையாளர்களும் ஆசிரியர்களும் புரிந்துகொள்ள வேண்டும். இதனால் உண்மையிலேயே கவலைப்படுவது இந்த மாணவச் செல்வங்களை பெற்றெடுத்த பெற்றோர்கள் என்பதை, அரசும் மேற்படி இரு கூட்டத்தாரும் புரிந்துகொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமக்கு கட்டாயமாக திணிக்கப்பட்டுள்ள வரிப்பிரச்சினையை நிதி அமைச்சின் மூலமாகவும் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேசித்தீர்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினை நிதியமைச்சருடனும் நிதியமைச்சுடனும் சம்பந்தப்பட்ட விடயமாகும்.

ஆசிரியர்களின் சம்பளப்பிரச்சினை கல்வியமைச்சுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். எனவே, ஆசிரியர்கள் தங்களது சம்பள முறைப்பாட்டைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய ஒரே இடம் கல்வியமைச்சாகும்.

இதில் வேடிக்கை என்னவென்றால், இரண்டு வெவ்வேறு பிரச்சினைகளை ஒன்றாக இணைத்துக்கொண்டு, அப்பாவி மாணவர்களை பகடைக்காய்களாக பிரயோகிப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

இந்தப் பிரச்சினைகளை மையமாக வைத்து அப்பாவி மாணவர்களை பணயக்கைதிகள் போல் செயற்படுத்த முற்படுவது கற்றவர்கள் புரியும் நற்செயல்கள் அல்ல.

இதேவேளை, விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடாதோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து அவர்களின் சொத்துகள் அரசுடைமையாக்கப்படும் என்ற ஜனாதிபதியின் கூற்றை முற்றிலும் நிராகரிக்கிறேன். இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முற்பட வேண்டுமே தவிர அதனை மேலும் தீவிரமாக்க முயற்சிக்கக் கூடாது என்றார்.

### விடைத்தாள் திருத்தும் பணி...

பெப்ரவரி மாதத்தில் முதலாவது வாரத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தையை முன்னெடுத்திருந்தேன். அதன் பின்னர் பிரதமரின் தலைமையில் திறைசேரியின் செயலாளர், அரச நிர்வாக அமைச்சு, பரீட்சைத் திணைக்களம், கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்டோரின் பங்குப்பற்றலுடனேயே இரண்டாவது கலந்துரையாடலை முன்னெடுத்திருந்தோம்.

அந்த கலந்துரையாடலின் போது பிரதானமாக நான்கு கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்கள். அவற்றில் முதலாவது கோரிக்கை, வரிக் கொள்கையை திருத்தியமைக்குமாறு வலியுறுத்தியிருந்தார்கள். 2020, 2021ஆம் ஆண்டுகளில் புலமைப் பரிசில் பெற்றுக்கொண்டவர்களுக்கு இறுதி செய்ய முடியாமையினால், நியமனங்களை பெற்றுக்கொடுப்பதில் பிரச்சினை இருந்தது. அது அவர்களின் மற்றைய கோரிக்கையாக இருந்தது. வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் தொடர்பிலும் கோரிக்கையை முன்வைத்திருந்தார்கள். வரிக்கொள்கை தவிர அவர்களின் ஏனைய கோரிக்கைகளுக்கு அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பித்து அதற்கு அனுமதியையும் பெற்றுக்கொண்டிருந்தேன். ஆனால், அது சுற்றறிக்கையாக வெளியிடுவதற்கு சிறிது காலம் தேவைப்படும் என்றார்.

### கப்பலுக்காக...

நா. தினுஷா

இலங்கை கடற்பரப்பில் தீப்பரவலால் விபத்துக்குள்ளான எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான வழக்குத்தாக்கல் செயற்பாடுகளை காலந்தாழ்த்துவதற்காக, சமார குணசேகர என்றழைக்கப்படும் நபரொருவரின் வங்கிக் கணக்குக்கு 250 மில்லியன் அமெரிக்க டொலர் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் நேற்று (25) தெரிவித்தார்.

குறித்த நபர் தொடர்பான விபரங்கள் எனது கோரிக்கைக்கமைய எனக்கு கிடைத்த தகவல் மாத்திரமேயாகும். இதனை சாட்சியாக நான் கொள்ளவில்லை. பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவினரின் விசாரணைகளை அடுத்தே இந்த விபரங்கள் சாட்சியா இல்லையா என்பதை தீர்மானிக்க முடியும் என்பதுடன் இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தான் தயாராக இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கேள்விகளுக்கு பதிலளித்து நேற்றைய பாராளுமன்ற கூட்டத்தொடரில் உரையாற்றும்போதே இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து கூறுகையில்,

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் சம்பவத்தில் பல்வேறு தரப்பினர் குறித்து வெவ்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் அவ்வாறானவொரு சம்பவம் இடம்பெற்றிருந்தால் அதுதொடர்பில் தனக்கு தகவல் பெற்றுக்கொடுக்குமாறு கோரியிருந்தேன். அதனடிப்படையில் எனக்கு தகவலொன்று கிடைத்திருந்தது. அதற்கான சாட்சி எனக்கு கிடைக்கவில்லை. தகவலொன்றே எனக்கு கிடைத்தது.

பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடிக்கு சாட்சி கிடைத்திருந்தது. குறித்த சாட்சியின் பெயர் முகவரியை குறிப்பிட்டிருந்தார். ஆனால், எனக்கு கிடைத்தது தகவல் என்பதால் பெயர், முகவரி போன்ற விடயங்களை குறிப்பிடாமல் இருக்க முயற்சித்தேன். பொலிஸ் மா அதிபரின் பரிந்துரைக்கமைய குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் பிரதி பொலிஸ் மா அதிபரினால் இதுதொடர்பில் விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த நபரின் பெயரை குறிப்பிடுமாறு எனக்கு சவால்களும் விடுக்கப்பட்டிருந்தன. சாட்சி தொடர்பான விபரங்கள் பொலிஸாரினாலேயே வெளியிடப்பட வேண்டும் என்பதால், நீதி அமைச்சர் என்ற அடிப்படையில் சட்டத்தை மதித்தே செயற்பட்டேன். இருந்தபோதும், அந்த தகவலை வெளியிடுகிறேன். ஆனால், அதற்கான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். இதுவொரு தகவலாகும். இது சாட்சியா இல்லையா என்பதை பொலிஸாரின் விசாரணைகளை தொடர்ந்து இறுதிக்கட்டத்திலேயே தீர்மானிக்க வேண்டும்.

எனக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் சாமர குணசேகர என்பவரே இந்த நிதியை இலஞ்சமாக பெற்றுக்கொண்டுள்ளார்.

இவரின் வங்கிக் கணக்கில் 250 மில்லியன் அமெரிக்க டொலர் இருப்பில் இருப்பதாகவே எனக்கு தகவல் கிடைத்தது. இதுதொடர்பான விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன என்றார்.

### அரசின் இனவாத முகம்...

காட்டுகின்ற இந்த அரசாங்கத்தோடும் சில புல்லுறுவிகள் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்படியான புல்லுறுவிகள் எங்கேயும் எப்போதும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், அரசாங்கம் என்ற ரீதியிலே நியாயமாக நடக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கிறது. அவ்வாறு நடக்காதவிடத்து அதனை வெளிப்படுத்துகின்ற பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களுக்கு இருக்கிறது" - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் சபையில் நேற்று (25) தெரிவித்தார்.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை மீதான விவாதம் நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்றபோது சுமந்திரன் எம்.பி. இவ்வாறு குறிப்பிட்டார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொல்பொருள் திணைக்களத்தின் இலட்சினையில் தூபியும், தர்மச்சக்கரமும் மட்டுமே உள்ளன. அது புத்தசாசன அமைச்சின் சின்னமா என்று எண்ணத்தோன்றுகிறது. தொல்பொருள் திணைக்களம் ஒரு மதத்தை மாத்திரமே பிரதிபலிக்கிறது. அந்தத் திணைக்களம் எதனை பாதுகாக்க முயல்கிறது என்பதை அதன் இலட்சினை பிரதிபலிக்கிறது. அது ஏனைய மத அடையாளங்களை அழிக்க முயல்கிறது.

வெடுக்குநாறிமலை மதச் சின்னங்கள் அழிப்பு தொடர்பான வழக்கில் முன்னிலையாகும் சட்டத்தரணி என்ற வகையில் விடயமொன்றை கூற விரும்புகிறேன். தற்போது அங்குள்ள இந்து மதச் சின்னங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, அங்கு வழிபாடுகளை தடுக்கும் முயற்சியில் தொல்பொருள் திணைக்களம் ஈடுபட்டது. கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அதற்கு எதிராக பல வழக்குகளும் தொடரப்பட்டன. எனினும், அவர்களால் அதனை தடுக்க முடியவில்லை. தற்போது, இனந்தெரியாதோரால் மதச் சின்னங்கள் தாக்கியழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர் - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர, கோயில்கள், சிலைகள் உடைத்தழிக்கப்படுவதாகவும் சமயம் அழிக்கப்படுவதாகவும் சுமந்திரன் எம்.பி. குற்றஞ்சாட்டுகிறார். சம்பந்தப்பட்ட அமைச்சர் இவ்விடத்தில் இல்லாததால் நான் இதனை சொல்கிறேன்.

இது முற்றிலும் பொய்யான கருத்து. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்கவில்லை. இவ்வாறானதொன்று நடைபெறாது. இந்த இலட்சினை பற்றி கூறுகிறார். இந்த இலட்சினை இன்று நேற்று உருவாக்கப்பட்டதல்ல. இது பல ஆண்டுகள் உள்ளது. எந்தவொரு மதத்துக்கோ, இனத்துக்கோ வேற்றுமை பார்க்கவில்லை. இதற்கு இடமளிக்கவும் மாட்டோம்.

இது சாதாரணமானதொரு இலட்சினையா? அவ்வாறாயின், அந்த இலட்சினையை தற்போது உங்களால் மாற்ற முடியுமா என சுமந்திரன் எம்.பி. கேள்வியெழுப்பியபோது,

நீங்கள் இது தொடர்பிலான பிரேரணையொன்றை கொண்டுவாருங்கள். இதுகுறித்து நாங்கள் கலந்தாலோசிக்கின்றோம். எங்களுக்கு எந்தவொரு மதத்தையோ அல்லது இனத்தையோ வேறுபடுத்தவோ சிறுமைப்படுத்துவதற்கான தேவைப்பாடோ இல்லை - என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய சுமந்திரன் எம்.பி., தாம் வன்முறையை விரும்பவில்லை என்றும், அரசாங்கத்தின் இனவாத நோக்கிலான செயற்பாடுகள் களையப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், வடக்கு - கிழக்கில் இன்று (நேற்று) முழுமையான கதவடைப்பு (ஹர்த்தால்) பொதுமக்களின் பூரண ஆதரவுடன் முன்னெடுக்கப்படுகிறது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்கின்ற ஒரு சட்டம் அறிமுகப்படுத்தப்படவிருந்த நிலையில் நாட்டிலும், சர்வதேசத்திலும் இதற்கு எதிராக எழுப்பப்பட்ட குரல்களுக்கு பயந்து அது பிற்போடப்பட்டுள்ளது.

அத்தோடு, அண்மைக்காலமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் பௌத்த - சிங்கள மயமாக்கலுக்கு எதிராக வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்கள் இவ்வாறு தங்களின் எதிர்ப்பை தெரிவித்திருந்தனர்.

இப்போது பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குகின்றோம் என்ற போர்வையில் அதைவிட பன்மடங்கு மோசமான சட்டத்தை பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமாக அரசாங்கம் அறிமுகப்படுத்தி, ஆனால் இன்று ஓரளவு பின்வாங்கியிருக்கிறது. அது போதாது. அது முற்றுமுழுதாக நீக்கப்பட வேண்டும். அதுவரை பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நீக்குவதற்கும் இல்லாது செய்வதற்குமான எங்களது போராட்டம் தொடரும். எங்களின் காணிகளை அபகரிக்கும் விடயத்தை எக்காலத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. எங்களின் எதிர்ப்புகள், போராட்டங்கள் நடைபெறுகின்றபோது அதனை மீறி அரசாங்கம் செயற்படுமாக இருந்தால் பாரியதொரு சட்டமறுப்பு போராட்டத்துக்கு அரசாங்கம் முகங்கொடுக்க வேண்டியதாக இருக்கும். நாடு பொருளாதார நெருக்கடியால் அதலபாதாளத்தில் இருக்கின்றபோது இவ்வாறானதொரு சிக்கல் தேவைதானா? தொடர்ச்சியாக இன, மத ரீதியாக எங்களை அடக்கி ஒடுக்கி ஒரு பேரினவாத முகத்தை காண்பிப்பீர்களாக இருந்தால் நாடு இன்னும் அதலபாதாளத்துக்கு செல்வதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என்றார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் சித்திரை மாதம் 13ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்** – இளைய சகோதரர் உதவிக்கரம் நீட்டுவார். தடைப்பட்டிருந்த காரியத்தால் வெற்றியும் மகிழ்ச்சியும் உண்டு.

**ரிஷபம்** – கொடுத்த வாக்குறுதியை இன்று வெற்றிகரமாக நிறைவேற்றப் போகின்றீர்கள். பணக்குறை தீரும்.

**மிதுனம்** – உறவினர்கள், நண்பர்ளால் எதிர்பாராத உதவிகள் உண்டு. இன்று யாருக்கும் எதையும் விட்டுக் கொடுக்க மாட்டீர்கள்.

**கடகம்** – சுப காரியங்களுக்கான செலவுகள் வரும், உடலுக்கான மருத்துவப் பரிசோதனைகளை செய்து கொள்வீர்கள்.

**சிம்மம்** – தொழில் வியாபாரத்தில் உங்கள் முயற்சிக்கேப்ப லாபங்கள் அமையும். பூமியால் லாபங்களை அடைவீர்கள்.

**கன்னி** – வெளித் தொடர்புகளால் எதிர்பாராத நன்மைகளையும், லாபங்களையும் அடைவீர்கள். தொழில் மேன்மை உண்டு.

**துலாம்** – நீண்ட நாள் சொத்துப் பிரச்சினை தீரப்போகின்றது. புண்ணிய விடயங்களுக்காக இன்றைய நாளை ஒதுக்குவீர்கள்.

**விருச்சகம்** – மனதைப் போட்டு வீணே குழப்பிக் கொள்வீர்கள். எதற்கும் பதறாமல் அமைதியாக செயல்படுங்கள்.

**தனுசு** – உங்கள் காதலுக்கு பச்சைக் கொடி காட்டப்படும் நாள். வெற்றி, புகழ், கீர்த்தி அனைத்தும் உயரும் நன் நாள்.

**மகரம்** – உடல் நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள். நினைத்ததை சாதிக்காமல் நித்திரைகொள்ள மாட்டீர்கள்.

**கும்பம்** – அரச வகையில் பல சலுகைகளைப் பெறுவீர்கள். உங்கள் மன எண்ண அலைகள் மிக வேகமாக செயற்படும்.

**மீனம்** – உங்கள் புத்தியின் திறமைக்காக பல பரிசுகளையும் பாராட்டுகளையும் பெறுவீர்கள். தாயின் உடல்நிலை தேறும்.

| | |
|---|---|
| **திதி** | : ஷஷ்டி மு.ப.11.28 வரை பின் ஸப்தமி |
| **நட்சத்திரம்** | : புனர்பூசம் முழுவதும் |
| **யோகம்** | : சித்த யோகம் |
| **வார சூலை** | : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | : மு.ப. 8.56 – 9.56 மணி வரை |
| **ராகு காலம்** | : 11.56 – 1.26 மணி வரை |
| **எமகண்டம்** | : 7.26 – 8.56 மணி வரை |
| **குளிகை** | : 10.26 – 11.56 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | : விருச்சிக ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தன அதிர்ஷ்டம்** | : திருவாதிரை, சுவாதி,சதயம் (பிறந்தவர்களுக்கு) |
| **விஷேட தினம்** | : -------- |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**

# தன்பாலின ஈர்ப்பாளர்கள் - மாற்றுபாலினத்தவர்களை குற்றவாளிகளாகக் கருதும் சட்டங்களை நீக்குக!

## ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் குழு அரசாங்கத்திடம் கோரிக்கை

தன்பாலின ஈர்ப்பாளர்கள் மற்றும் மாற்றுபாலினத்தவர்களை குற்றவாளிகளாகக் கருதும் சட்டங்களை நீக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் குழு, இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையின்கீழ் இலங்கை தனது கடமைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்வதற்கு பொறுப்பான ஐ.நா. சிறுவர் உரிமைகள் குழு, தன்பாலின உறவுகளைக் குற்றமாக்கும் சட்டங்களை இரத்துசெய்யுமாறு அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

இலங்கை தொடர்பான அதன் அறிக்கையில், மாற்றுப்பாலின (LGBT) மக்களுக்கு எதிரான பாகுபாட்டை எதிர்த்துப் போராடவும், அவர்களுக்கு எதிரான துன்புறுத்தலைத் தடுக்கவும், அவர்களுக்கு எதிரான வன்முறையில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவும் இலங்கை அரசாங்கத்திடம் அந்தக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் குழுவின் பரிந்துரைகளை இலங்கை ஏற்றுக்கொண்டதுடன், "சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கிணங்க அவற்றைக் கொண்டுவருவதற்காக" தண்டனைச் சட்டச் சீர்திருத்தங்களுக்கு உறுதியளித்துள்ளதாகவும் அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், குற்றவியல் சட்டத்தின் தற்போதுள்ள சில பிரிவுகளின் கீழ், சிறுவர்கள் "குற்றவாளிகளாகக் கருதப்படுகிறார்கள்" என்பதையும் அந்தக் குழு எடுத்துக்காட்டுகிறது.

எனினும், சட்டம் காலனித்துவ காலத்திலிருந்து மரபுரிமையாகப் பெறப்பட்டது என்றும், தற்போதைய அரச நடைமுறையின் கீழ், சிறுவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுவதில்லை என்றும் இலங்கை அரசாங்கம் தெளிவுபடுத்தியது.

முன்மொழியப்பட்ட குற்றவியல் (திருத்தம்) சட்டமூலம் பிரிவு 365ஐ திருத்துவது மற்றும் பிரிவு 365A ஐ இரத்துசெய்வது, சிறுவர்களுக்கு தீங்கு விளைவிப்பதுடன், சிறுவர்களுக்கான இலங்கையின் ஐ.நாவுக்கான வாக்குறுதிகள் மீறப்படுகின்றன என்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் ஷர்மிளா கோனவல தலைமையிலான நகர்ப்புற குடிமக்கள் போன்ற அமைப்புகளால் பரப்பப்படுகின்ற பொய்யான கதைகளை ஐ.நா. சிறுவர் உரிமைகள் குழுவின் வலுவான அறிக்கை நேரடியாக சவால் செய்கிறது.

100க்கும் மேற்பட்ட சிறுவர் உரிமைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்கள், சட்டத்தரணிகள் சிறுவர் பாதுகாப்புப் படை மற்றும் சிறுவர் வன்கொடுமை தடுப்பு அறக்கட்டளை, பிற தொழில் வல்லுநர்கள் ஆகியோர் குற்றவியல் (திருத்தம்) சட்டமூலத்துக்கு ஆதரவாக சமீபத்தில் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளனர். இந்தச் சட்டத்தை இயற்றினால் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக நேரிடும் என்று பரப்பப்படும் "பொய்களை" நம்ப வேண்டாம் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## பிறப்புச் சான்றிதழ் இன்றி தேசிய அடையாள அட்டை



பிறப்புச் சான்றிதழ் இல்லாத இலங்கைப் பிரஜைகளுக்குத் தேசிய அடையாள அட்டை வழங்கும் புதிய முறையை ஆட்பதிவுத் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, இது தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கை அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம அதிகாரிகளுக்கு ஏப்ரல் 19ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

# நெடுந்தீவு கொலை சந்தேகநபருக்கு விளக்கமறியல்

நெடுந்தீவில் ஐந்து முதியவர்களை படுகொலை செய்து, 100 வயதான மூதாட்டிக்கு கடும் காயங்களை ஏற்படுத்தி, நகைகளைக் கொள்ளையடித்த குற்றச்சாட்டில் கைதான நபரை எதிர்வரும் 09ஆம் திகதிவரையில் விளக்கமறியலில் தடுத்துவைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஜே.கஜநிதிபாலன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை நெடுந்தீவு இறங்குதுறைக்கு அருகிலுள்ள வீடொன்றிலிருந்து ஐந்து முதியவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டதுடன், 100 வயதான மூதாட்டி படுகாயங்களுடன் மீட்கப்பட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு, சிகிச்சைபெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், குறித்த வீட்டில் சம்பவம் இடம்பெற்ற தினத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன்பிருந்து தங்கியிருந்த நபரை கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

குறித்த நபர் வெளிநாடொன்றில் வசித்துவந்த நிலையில், கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அந்நாட்டிலிருந்து, இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டவர் எனவும், அவரிடமிருந்து கொலையானவர்களின் உடைமைகள் மற்றும் நகை உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளதாகவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை நீதவான் முன்னிலையில் முற்படுத்திய பொலிஸார் சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க ஏதுவாக 48 மணிநேரம் பொலிஸ் காவலில் வைத்து விசாரணைகளை முன்னெடுக்க அனுமதிக்க வேண்டும் என மன்றில் கோரினர்.

பொலிஸாரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மன்று, 48 மணிநேரத்தின் பின்னர் சந்தேகநபரை மன்றில் முற்படுத்துமாறு பணித்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் (24) சந்தேகநபரை சம்பவம் இடம்பெற்ற வீட்டிற்கு அழைத்துச்சென்ற பொலிஸார், சம்பவ இடத்தில் வைத்து விசாரணைகளை முன்னெடுத்ததுடன், கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கத்தி மற்றும் கொலைசெய்யும்போது உடுத்தியிருந்த சாரம் என்பவற்றை குறித்த வீட்டின் கிணற்றிலிருந்து பொலிஸார் மீட்டிருந்தனர்.

அதனையடுத்து மேலதிக விசாரணைகள் முடிவடைந்த நிலையிலும் மன்றினால் வழங்கப்பட்ட 48 மணிநேர அவகாசம் முடிவடைய இருந்த நிலையில், நேற்று (25) ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் சந்தேகநபரை முற்படுத்தியபோது, சந்தேகநபரை எதிர்வரும் 09ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.





நு/கார்லபேக் தமிழ் வித்தியாலயத்தில் புதிய வகுப்பறையொன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவமும், தரம் 6இற்கு மாணவர்களை உள்ளீர்த்தலும் அதிபர் எஸ்.விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 2022 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களும், அவர்களை வழிநடத்திய ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

# வரக்காபொல தபால் நிலையத்தில் முத்திரைகள் மற்றும் பணம் திருட்டு

வரக்காபொல பிரதான தபால் நிலையத்தில் 10 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான முத்திரைகள் மற்றும் பணம் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் வரக்காபொல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 21ஆம் திகதி இரவு இனந்தெரியாத நபர் ஒருவர் ஜன்னலை உடைத்து உள்நுழைந்து, அங்கிருந்த ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான முத்திரைகளையும், சுமார் 9 இலட்சம் ரூபா பணத்தையும் திருடிச்சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தபால் மா அதிபர் நேற்று முன்தினம் (24) வரக்காபொல பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கமைய இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.







அறமுன – மீட்போம் இலங்கையை Reset Sri Lanka நாடளாவிய செயற்திட்டத்தின் காலி தொழில்முனைவோர்க்கான கூட்டம் ஏப்ரல் 23ஆம் திகதி காலி நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

# 8.4 கோடி ரூபா பெறுமதியான ‘குஷ்’ போதைப்பொருள் மீட்பு



பேலியகொட - லக்சிறி கொள்கலன் முனையத்தில் வைத்து நேற்று சுமார் 8.4 கோடி ரூபா பெறுமதியான ‘குஷ்’ என்ற விசேட கஞ்சா வகை போதைப் பொருளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சரக்கு சேவை மூலம் கனடாவில் வசிக்கும் ஒருவரால் நாட்டுக்கு அனுப்பப்பட்ட இரண்டு மரப்பெட்டிகளின் அடிப்பகுதியில் நிரப்பப்பட்டிருந்த ‘குஷ்’ போதைப்பொருள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது, இரண்டு மரப்பெட்டிகளின் போலியான அடிப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 12 கிலோகிராம் எடையுள்ள 24 ‘குஷ்’ பொதிகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்தப் பொருட்களை சுங்கத்திலிருந்து விடுவிப்பதற்காக பொருட்களின் உரிமையாளரால் அங்கீகரிக்கப்பட்ட எழுதுவினைஞர் வந்திருந்தார். அவரும் போதைப்பொருளுடன் சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

# டயலொக் ஆசிஆட்டா 1990 சுவ செரிய அவசர சேவைகளுக்கான உத்தியோகபூர்வ இணைப்பாளராக தனது பங்களிப்பை அளிக்க முன்வந்துள்ளது

இலங்கையின் முதன்மை இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி நாடளாவிய ரீதியில் இலவச முன்-மருத்துவமனை அவசர சிகிச்சை சேவையை வலுவூட்டுவதற்கு உத்தியோகபூர்வ ‘இணைப்பு கூட்டாளராக’ 1990 சுவ செரிய அவசர சுகப்படுத்தல் (அம்பிலியூலன்ஸ்) சேவைக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளது.

1990 சுவ செரிய அறக்கட்டளை, அனைத்து இலங்கையர்களுக்கும் அத்தியாவசிய அவசர சிகிச்சையை வழங்கி வருகின்றது. அதற்கமைய நாளொன்றுக்கு 1050 சிகிச்சைகளைக் கையாளும் அதேவேளை, சராசரியாக 11.40 நிமிடங்கள் பதிலளிக்கும் நேரத்தை செலவிடுவதுடன், மொத்தமாக வருடத்திற்கு 6 மில்லியன் அழைப்புகளுக்குப் பதிலளிக்கிறது. இந்த அர்ப்பணிப்பின் மூலம் 1990 சுவ செரிய அவசரகால சுகப்படுத்தல் சேவைகள் இயங்குதளத்தை புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கும் நாடு முழுவதும் தொடர்ச்சியான இணைப்புக் கட்டமைப்பை வழங்குவதற்கும் மற்றும் அவசரநிலைகளுக்கு விரைவான மற்றும் பயனுள்ள பதிலளிப்பை உறுதிசெய்வதன் மூலமும் சுவ செரிய அவசர சேவைகளை டிஜிட்டல் மயப்படுத்தலூடாக டயலொக் மேம்படுத்தியுள்ளது.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "அனைத்து இலங்கையர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முடியும் என நாங்கள் நம்புகிறோம். மேலும் 1990 சுவ செரிய உடனான எங்கள் கூட்டாண்மை மூலம் உயிர்களை காத்திடுவதற்கு தொழில்நுட்பத்தின் சக்தியைப் பயன்படுத்துவதை நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம். அதற்கமைய 1990 சுவ செரிய அம்பியூலன்ஸ்சேவையை சிறந்த இணைப்பு உள்கட்டமைப்புடன் மேம்படுத்துவதே எங்கள் இலக்காக அமைந்துள்ளது. இதன்மூலம் இந்த உயிர்காக்கும் சேவையினை நாடு முழுவதிலும் உள்ள அதிகமான மக்களுக்கு அவர்களால் வழங்கக்கூடியதாக இருக்கும்" - என்றார்.



டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க, 1990 சுவ செரிய அறக்கட்டளையின் தலைவர் துமிந்திர ரத்நாயக்கவிடம் அனுசரணையை கையளிப்பதை படத்தில் காணலாம். மேலும் படத்தில் (இ-வ) டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இடர் மற்றும் இணக்கப்பாடு குழுவின் தலைவர் அசங்க பிரியதர்ஷன மற்றும் 1990 சுவ செரிய அறக்கட்டளையின் பிரதம நிறைவேற்று அதிகாரி சொஹான் டி சில்வா ஆகியோரையும் காணலாம்.

1990 சுவ செரிய அறக்கட்டளையின் தலைவர் துமிந்திர ரத்நாயக்க தெரிவிக்கையில், "டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியை எங்களின் உத்தியோகபூர்வ இணைப்புப் பங்காளியாக வைத்திருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஏனெனில், இந்த கூட்டாண்மையானது அவசர சிகிச்சை தேவைப்படுகின்ற இன்னும் அதிகமான இலங்கையர்களை சென்றடைய எங்களுக்கு உதவிக்கரமாக அமையும். அதற்கமைய டயலொக் வழங்கும் ஆதரவுடன் புதிதாக நிறுவப்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விரைவான பதிலளித்தல் நேரத்தை வழங்க முடியும். இறுதியில் எம்மால் இன்னும் அதிக உயிர்களைக் காத்திடுவதற்கு அது வழிசமைக்கும். சமூகப் புத்தாக்கம் மற்றும் பொறுப்புணர்வைத் தூண்டுவதில் டயலொக்கின் இத்தகைய அர்ப்பணிப்புக்கு நாங்கள் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். நமது மக்களில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதில் இவ்வாறு தொடர்ந்தும் ஒன்றாகச் செயல்பட நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்" என்றார். சுவ செரிய பற்றிய கூடுதல் விபரங்களை https://www.1990.lk/ மூலம் அணுகலாம்.

Dialog

# சட்டவிரோத மருந்து உற்பத்தி நிலையமொன்று சுற்றிவளைப்பு







மோதரையில் சட்டவிரோத மருந்து உற்பத்தி நிலையமொன்று தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் உணவு மற்றும் மருந்துகள் பிரிவு அதிகாரிகளால் சுற்றிவளைக்கப்பட்டது.

கொழும்பு-15, மோதரையிலுள்ள சட்டவிரோத மருந்து உற்பத்தி நிலையமொன்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், அதன் உரிமையாளரின் வீட்டிலிருந்து மருந்து வகைகள் மற்றும் மருந்து உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் மூலப்பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் உணவு மற்றும் மருந்துகள் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த நபர் வலி நிவாரணி மாத்திரைகளை தயாரித்துள்ளதாகவும், இந்திய மருந்து வகைகளுக்கு நிகரான மருந்துகளை தயாரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஏப்ரல் 26ஆம் திகதி, புதன்கிழமை

# மீண்டும் தெரிந்த இனவாத முகம்!

''தமிழ் மக்களின் பிரச்சினைகளை சபையில் எடுத்துரைக்கும்போது புலிகள் எனக் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. பாராளுமன்றத்தில் உரையாற்றும் வழிமுறைகளை ஆளும் தரப்பு அமைச்சர் கற்றுக்கொள்ள வேண்டும்'' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவை நோக்கி நேற்று நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (25) வாய்மூல விடைக்கான வினாக்களுக்கான வேளையின்போது எழுந்து உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம்,

''மட்டக்களப்பு மாவட்டத்தில் எழுவான்கரை மற்றும் படுவான்கரை ஆகிய பகுதிகளில் பாலம் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள். கிழக்கு மாகாண ஆளுநர் ஓர் இனவாதி. கிழக்கு மாகாணத்தில் வாழும் சிங்கள மக்களின் பாதுகாவலனாக தன்னை நினைத்துக் கொண்டு ஒருதலைப் பட்சமாக செயற்படுகிறார். தமிழர்கள் வாழும் பகுதிகளில் உட்கட்டமைப்பு தேவைகள் நெருக்கடி நிலையில் காணப்படுகின்றன. தென் மாகாணத்தில் தேவையற்ற வீதி அபிவிருத்திகளும், பாலங்களின் நிர்மாணிப்புகளும் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முறையான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதில்லை. ஆகவே, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு என்ன?'' என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவை நோக்கிக் குறிப்பிட்டார்.

சாணக்கியன் இராசமாணிக்கம் தனது உரையை நிறைவு செய்வதற்கு முன்னர் அவர் உரையாற்றுவதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டது. இதற்கு சாணக்கியன் இராசமாணிக்கம் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தார். இதன்போது சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ,

''உங்களின் கேள்வி ஒழுங்குப்பத்திரத்தில் சேர்க்கப்படவில்லை. இருப்பினும், உங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. நீங்கள் சத்தமாக உரையாற்றினாலும் நான் அச்சமடைய போவதில்லை'' என்றார்.

இதனை தொடர்ந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கு கேள்விக்கு பதிலளிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதன்போது சாணக்கியன் ராசமாணிக்கம் தொடர்ந்து உரையாற்ற முற்பட்டு கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளை முன்வைக்கும்போது உரிமை மறுக்கப்படுகிறது என்றார்.

இதன்போது உரையாற்றிய மனுஷ நாணக்கார, ''புலிகளின் உண்மை முகம் வெளிப்படுகிறது. பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இவர்கள்தான் தடையாக உள்ளார்கள்'' என கடுமையாக விமர்சனங்களை முன்வைத்தார்.

அச்சமயம் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ''மாவட்டங்களில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகளை முன்வைத்து உரையாற்றும்போது புலிகள் என குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த அமைச்சர் அரசியலில் எவ்வாறு செயற்படுகிறார் என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள். சபையில் உரையாற்றும் வழிமுறையை அமைச்சர் கற்றுக்கொள்ள வேண்டும்'' என வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் தொழில் அமைச்சரை நோக்கிக் குறிப்பிட்டார்.

அமைச்சர் மனுஷ நாணயக்கார கூறிய அந்தக் கருத்து 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதுபோல் இருக்கிறது. சாணக்கியனை நோக்கி 'கொட்டியா' என்று கூறி மனுஷ சத்தமிட்டபோதிலும், அந்தக் கருத்து தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரோ, ஆளுங்கட்சிப் பிரமுகர்களோ, எவருமே வாய்திறக்கவில்லை. தமிழர் பிரச்சினைகளை பேசினாலே அவர்கள் புலிகள் என்று அடையாளப்படுத்தும் இனவாத அரசியல்வாதிகள், புலிகள்தான் தமிழர்களின் பிரச்சினைகளை பேசினார்கள் என்பதையும் மறைமுகமாக ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கின்றனர்.

பாராளுமன்றம் என்பது மக்கள் மன்றம். அங்கு மக்களின் பிரச்சினைகளைப் பேச எவருக்கும் உரிமையிருக்கிறது. அப்படி பேசுபவர்களை இன, மத ரீதியாக அடையாளப்படுத்த முடியாது. அல்லது வேறெந்த அடைமொழிகளையும் குறிப்பிட்டு விளிக்க இடமில்லை. அப்படியாயின் இப்போதுள்ள தேசிய மக்கள் சக்தியின் எம்.பிக்களை ஜே.வி.பி. கால கொலைகாரக் கும்பலின் உறுப்பினர்கள் என்று கூறலாமா?

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடந்ததால் அனைத்து முஸ்லிம்களும் தீவிரவாதிகள் - தமிழர் ஆயுதப்போராட்டம் நடந்ததால் அனைத்து தமிழர்களும் புலிகள் என்ற சிந்தனை சிங்கள இனவாத அரசியல்வாதிகளின் ஆழ்மனதில் வேரூன்றியுள்ளது. அதன் வெளிப்பாடே அமைச்சர் மனுஷவின் இந்தக் கருத்து.

வடக்கு - கிழக்கில் நேற்றைய தினம் நடந்த ஹர்த்தால் போராட்டம் தொடர்பில் அரசாங்கம் அதிருப்திக்குள்ளாகியுள்ளமை மனுஷவின் கருத்தினால் வெளிப்பட்ட மற்றுமொரு தகவலாகும். தமிழர், முஸ்லிம்கள் மீது மட்டுமல்ல, தென்னிலங்கை சிங்கள மக்கள் மீதும் பாயவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எதிர்த்து தமிழ் பேசும் சமூகங்கள் போராடும்போது அதைக்கண்டு எரிச்சலடையும் அரசியல்வாதிகள், தமிழர்களை புலி என்று கூறினாலும் அதனை சிங்கள மக்கள் ஏற்கும் நிலையில் இல்லை. ஆனால், தமிழர்களை புலிகள் என்று கூறும் சிங்கள மனோநிலை என்றும் மாறாது என்பதையே மனுஷவின் நேற்றைய கருத்துகள் உணர்த்துகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையின் ஒருவர் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் புலி என்கிறார். ஆனால், மறுபக்கம் இன நல்லிணக்கம் குறித்து ரணில் விக்கிரமசிங்க வகுப்பெடுக்கிறார். தமிழர்கள் காதில் பூச் சுற்றுகிறதா அரசு? தேர்தலில் வெல்லாமல் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க ஒரு காலத்தில் புலிகளால் தோற்கடிக்கப்பட்டார் என்றொரு வரலாறுள்ளது.

அதனால் அவரின் அமைச்சரவையில் உள்ள ஒருவருக்கு புலிகள் என்றாலே அலர்ஜி இருக்கக் கூடும். எது எப்படியோ, மனுஷவின் ஊடாக அரசின் இனவாத முகம் வெளிப்பட்டுவிட்டது. உண்மையில் அதில் புதுமை எதுவும் இல்லை. சிங்கள இனவாதம் என்றும் மாறாது என்ற இந்தத் தீவின் வரலாற்று உண்மை நேற்று மீண்டும் பகிரங்கமாகியிருக்கிறது. அவ்வளவுதான்.

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

## ஏன் நிராகரிக்கப்பட வேண்டும்?




''இலங்கைப் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் அதன் அரசியல், சட்டவாக்க மற்றும் நீதித்துறை விவகாரங்களில் நிலவும் அதிகாரத் துஷ்பிரயோகங்களின் பின்னணியில் பார்க்கப்பட வேண்டும். சமீப காலங்களில் நாட்டில் அதிகார துஷ்பிரயோகம் மற்றும் தவறான பொருளாதார நிர்வாகத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த அமைதிவழிப் போராட்டக்காரர்கள் மற்றும் எதிர்ப்பாளர்களுக்கு எதிராக அரசு எடுத்த பயங்கர நடவடிக்கைகளை நாம் நினைத்துப் பார்த்தல் பொருத்தமாகும்.''

இவ்வாறு இலங்கையில் ஜனநாயகத்திற்கான குரல் சர்வதேச வலையமைப்பு (அவுஸ்திரேலியா, கனடா, ஐரோப்பா, ஐக்கிய இராச்சியம்) வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பான இலங்கையின் சரித்திரப் பதிவுகள் திகைக்க வைப்பவை. உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் பல அமைப்புகளும் தனிநபர்களும் இந்நிலைமை குறித்துத் தொடர்ந்து தீவிர கவலைகளை வெளிப்படுத்தியதோடு, தீர்வு நடவடிக்கைகளை எடுக்குமாறும் பலமுறை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

1979ஆம் ஆண்டு முதல் அரசாங்கத்தின் விதிப் புத்தகமாக இருக்கும் தற்போதைய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தைக் கொண்டு, சுதந்திரத்திற்குப் பிறகு அடுத்தடுத்து வந்த ஆட்சிகளால் தளம் அமைத்துக் கொடுக்கப்பட்ட இனப்பிரச்சினை மட்டிலான ஆயுத மோதலைத் தடுக்க முடியவில்லை. இச்சட்டத்தின் பயங்கரவாதம் எனும் பரந்த வரையறையின் கீழ், விசாரணைக்கு முந்திய நீண்டகால தடுப்புக்காவல்கள், சித்திரவதைகள், சிறுபான்மையினர் மற்றும் அரசியல் எதிர்ப்பாளர்களை இலக்குவைப்பது போன்றவற்றை நிறுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை அரசாங்கத்தைக் கேட்டிருந்தது.

ஐ.நா.வின் கோரிக்கையானது தற்போதைய பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்து, அதற்குப் பதிலாக சர்வதேச தரத்திற்கு இசைவான இணக்கப்பாடு, வெளிப்படைத்தன்மை மற்றும் மக்கள் பங்கேற்புக்கொண்ட புதிய சட்டத்தை உருவாக்க வேண்டும் என்பதே. இதற்கு பயங்கரவாதத்தின் பரந்த வரையறையை குறைத்து, அத்தகைய சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு முறையான சட்டப் பாதுகாப்புகளை வழங்க வேண்டும் என்பதுடன், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் சுதந்திரமாக கண்காணிக்கவும் அனுமதிக்க வேண்டும். மாறாக, முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலமோ, பயங்கரவாத வரையறையின் நோக்கத்தை மேலும் விரிவுபடுத்துவதன் மூலம், முனைப்புடன் செய்யும் அடிப்படை மனித உரிமை மீறல்களை வலுப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் அரசியல் அதிகாரத்தை வைத்திருப்பவர்கள் தாங்கள் மௌனப்படுத்த விரும்பும் எந்தவொரு நிறுவனத்திற்கும் அமைப்பிற்கும் அல்லது தனி நபருக்கும் எதிராக அதைப் பயன்படுத்தலாம்.

முறையான நீதித்துறை மேற்பார்வையின்றி ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புப் படைகளுக்கு பரந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், சாட்சியங்கள் இன்றி மக்களைத் தடுத்து வைப்பதற்கும், தன்னிச்சையாக அமைப்புகள் மற்றும் கூட்டங்களைத் தடை செய்வதற்கும், விமர்சனங்கள், கருத்து வேறுபாடுகள் மற்றும் எதிர்ப்புகளை குற்றமாக்குவதற்கும் இது இடமளிக்கிறது. மேலும், இச்சட்டமூலத்தில் பாரிய மாற்றங்கள் எதுவும் செய்யப்பட மாட்டாது என நீதியமைச்சர் பலமுறை கூறியுள்ளதோடு, சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு இது பயன்படுத்தப்படும் என அண்மையில் கூறியது மிகவும் கேலிக்குரியது. சர்வதேச சமூகம் இதைப் பொறுத்துக் கொள்ளாது.

இந்த பின்னணியில்தான், அனைத்து இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உத்தேச பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இயற்ற வேண்டாம் என்றும், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு அதிக முன்னுரிமை வழங்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் தனது குடிமக்களின் கூக்குரலுக்கு செவிசாய்த்து, மக்கள் நலன் சார்ந்த சட்டங்களை மட்டுமே இயற்ற வேண்டிய நேரம் இது.

இது தொடர்பாக இரு தினங்களுக்கு முன் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் 'இலங்கையில் ஜனநாயகத்திற்கான குரல்' எனும் சர்வதேச வலையமைப்பு மும்மொழிகளிலும் அனுப்பிவைத்த கடிதத்தின் தமிழ்ப் பிரதி வருமாறு:-

அனைத்து இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஓர் அன்பான வேண்டுகோள்

23 ஏப்ரல் 2023

கௌரவ பிரதமர், அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களே!

முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை இயற்ற வேண்டாம். ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு முதலிடம் கொடுக்கவும்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் மிகவும் புனிதமான கடமைகளில் ஒன்று, தங்கள் தொகுதி மக்களின் கருத்துகள் மற்றும் நலன்களை இதயத்தில் வைத்து புதிய சட்டங்களை உருவாக்குவதும், ஏற்கனவே உள்ள சட்டங்களை மாற்றுவதுமாகும். பாராளுமன்ற மசோதாக்களை கவனமாக ஆராய்வது, பொதுநலனுக்கான கொள்கைகளை விவாதிப்பது, மற்றும் அரசாங்க முடிவுகளை மறுபரிசீலனை செய்வது ஆகியவை இந்த முக்கிய கடமையை நிறைவேற்றுவதில் இன்றியமையாத பங்கை வகிக்கின்றன.

பயங்கரவாதத் தடைச்சட்ட மசோதா எதிர்வரும் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், அது மக்களின் வாழ்வுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் ஏற்படுத்தக்கூடிய நீண்டகால விளைவுகளை உணர்ந்தவர்களாக, உரிய கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக தற்போதைய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நாடு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த கால தவறுகளை சரிசெய்து இந்த சட்டமூலத்தை சரியாக உருவாக்குவது எமது அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமையாகும். இம்மசோதாவில் காணும் பிரச்சினைக்குரிய விடயங்கள் எவை? பின்வருபவை உட்படப் பல உள்ளன:-

'மோசமான சட்டத்தை' மாற்றுவதாகக் கொண்டுவரப்படும் மசோதா, உண்மையில் தற்போதைய சட்டத்தை விட மிகவும் மோசமானது

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் தொடர்பாக ஐ.நாவால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களை இது பூர்த்தி செய்யவில்லை.

மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் பரந்த அளவிலானவையும், தெளிவற்றதும், அகநிலை சார்ந்ததாகவும் இருப்பதால், சட்டத் துஷ்பிரயோகம் மற்றும் நீதி வழுவுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன

பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீதித்துறை சாராத தடுப்புக்காவல்களைக் கோரலாம். அத்துடன் முறையான குற்றச்சாட்டுகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் கைதுகள் மேற்கொள்ளப்படும்.

நீதித்துறை மேற்பார்வையின்றி நபர்கள் மற்றும் நிறுவனங்களை ஜனாதிபதி தடை செய்ய முடியும்.

அரசாங்கம் தனது அரசியல் எதிரிகள் என்று கருதுபவர்களையும் அமைப்புகளையும் முத்திரை குத்துவதற்கும், சட்டபூர்வமான நிலையை நீக்கம் செய்வதற்கும் சாத்தியமுள்ளது. அரச நடவடிக்கைகளை மறுப்பவர்களும் எதிர்ப்பவர்களும் குறிப்பிடப்படாத காலத்திற்கு சிறையில் அடைக்கப்படலாம்.

தன்னிச்சையான கைது, தடுப்புக்காவல் மற்றும் சித்திரவதைகளைத் தடுப்பதற்கான விதிகள் இம்மசோதாவில் இல்லை என்பதுடன், உரிய நடைமுறை மற்றும் நியாயமான விசாரணைக்கு உத்தரவாதங்கள் இல்லை – இதனால், மனித உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு அளித்த உறுதிமொழியை மீறுகிறது

'நியாயமான காரணங்கள்' இருப்பதாகக் கருதினால், யாரையும் தடுத்து நிறுத்தவும், கேள்வி கேட்கவும், தேடவும், கைதுசெய்யவும், அல்லது எந்த ஆவணம் அல்லது பொருளையும் பிடியாணை இல்லாமல் பறிமுதல் செய்யவும், பொலிஸ் மற்றும் இராணுவத்திற்கு இது மிகப்பரந்த அதிகாரங்களை வழங்குகிறது.

ஒரு மோசமான சட்டத்தை நீக்க மிகமோசமான சட்டத்தைக் கொண்டு வருவது, ஜனாதிபதி கூறுவதுபோல் ஐரோப்பிய ஒன்றியம் (GSP+ கட்டணச் சலுகை) அல்லது பிற சர்வதேச நன்கொடையாளர்களிடமிருந்து எந்தப் பொருளாதாரப் பலன்களையும் பெற்றுத்தராது. சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முடியாது.

பல தெளிவற்ற சட்டப்பிரிவுகளைக் கொண்ட இம்மசோதா பலவகையான துஷ்பிரயோகத்திற்கு இடமளிப்பதுடன், ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நீண்டகால வேதனைக்குரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

இவையனைத்தையும் கருத்தில் கொண்டு, தற்போதைய வடிவத்திலுள்ள மசோதா இரத்து செய்யப்பட வேண்டும்.

அதிகாரத்தை வைத்திருக்கும் அரசியல்வாதிகள் என்ற வகையில், தார்மீக உறுதியுடனும் நேர்மையுடனும் சரியானதைச் செய்யுமாறு நாம் உங்களை கேட்டுக்கொள்கிறோம். பொதுநலம், அரசியல் நேர்மை, மற்றும் 'சட்டத்தின் ஆட்சி மட்டில் மரியாதை' என்பன தன்னலத்தை வெற்றி பெறும் ஒரு தருணம் இதுவென நாம் நம்புகிறோம்.

தயவுசெய்து முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு தைரியத்துடனும் திடநம்பிக்கையுடனும் இல்லை என்று வாக்களிக்கவும். அவ்வாறு செய்யத் தவறுவதென்பது சமூக, அரசியல், பொருளாதார சுய அழிவிலிருந்து தேசத்தைக் காக்கும் பணியின் முன்னே அதன் கூட்டு மனோதிடம் வாடிப்போனதற்கு ஒப்பாகும்.

**நன்றி.**
**தங்கள் உண்மையுள்ள,**

**கலாநிதி லயனல் போபகே, அன்ரனி கிறேசியன்**
**தலைவர் மற்றும் இணைச் செயலாளர்**
**(அவுஸ்தி ரேலியா)**
**ரஞ்சித் ஹேநாயக்க ஆராச்சி, பேராசிரியர் சுரேஷ் சுரேந்திரன், தர்மசேன யகந்தவெல**
**இணை ஒருங்கிணைப்பாளர்கள்**
**(ஜேர்மனி,ஐக்கிய இராச்சியம், கனடா)**
**இலங்கையில் ஜனநாயகத்திற்கான குரல்,**
**சர்வதேச வலையமைப்பு**
**(அவுஸ்திரேலியா, கனடா,**
**ஐரோப்பா, ஐக்கிய இராச்சியம்)**
**மெல்பர்ன், அவுஸ்திரேலியா**
**தொடர்பு: +61 405 452 130**
**மின்னஞ்சல்: vdslintl@gmail.com**




## இன்றைய நாளில்...

- 1803 – பெருமளவு விண்வீழ்க் கற்கள் பிரான்ஸின் லாயிகில் நகரில் வீழ்ந்தன.
- 1865 – அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனை கொலை செய்த ஜோன் பூத் என்பவனை கூட்டணிப் படைகள் சுட்டுக் கொன்றன.
- 1867 – கொழும்பிலிருந்து கண்டி வரையிலான முதலாவது தொடர்வண்டி சேவை நடத்தப்பட்டது.
- 1903 – அத்லெடிகோ மாட்ரிட் உதைபந்துக் கூட்டமைப்பு அணி உருவானது.
- 1962 – நாசாவின் ரேஞ்சர்-4 என்ற ஆளில்லா விண்கலம் சந்திரனில் இறங்கியது.
- 1963 – லிபியாவில் அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டு, பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1981 – உலகில் முதல் தடவையாக திறந்த கருப்பை அறுவை சிகிச்சை அமெரிக்காவில், கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது.
- 1981 – ஈழப்போர்: மட்டக்களப்பில் பட்டித்திடலில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த 16 தமிழர்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1989 – உலக வரலாற்றில் மிகவும் பயங்கரமான சுழல் காற்று பங்களாதேஷின் நடுப்பகுதியைத் தாக்கியதில் 1,300 இற்கும் அதிகமானோர் உயிரிழந்ததுடன், 12,000 பேர் காயமடைந்தனர். மேலும், 80,000 பேர் வீடுகளை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

## 24.04.2023 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

**01. நுவரெலியா சுற்றுலா அபிவிருத்தி பிரதான திட்டத்தைத் தயாரித்தல்**

நுவரெலியா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் முறையற்ற வகையிலான அபிவிருத்திகள் காரணமாக நுவரெலியா நகரத்தின் அழகிய தோற்றம் படிப்படியாகக் குன்றி வருவதுடன், அதன்மூலம் சுற்றுலாத்துறைக்குப் பெரும் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. அதனால், குறித்த பிரதேசத்தில் சுற்றுலாத்துறையின் விருத்திக்குத் தேவையான சூழலை உருவாக்கக்கூடிய வகையில் விரிவான சுற்றுலா அபிவிருத்திக்கான பிரதான திட்டத்தைத் தயாரிக்க வேண்டிய தேவை மேலெழுந்துள்ளது. அதற்கமைய, குறித்த அனைத்து பங்கீடுபாட்டாளர்களையும் இணைத்துக்கொண்டு ஜனாதிபதி செயலகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் நுவரெலியா சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான பிரதான திட்டத்தைத் தயாரிப்பதற்கும், புதிய கட்டிட நிர்மாணங்களுக்கான ஒழுங்குபடுத்தல்களுக்காக மத்திய மாகாண ஆளுநர் தலைமையிலான செயலணியொன்றை நியமிப்பதற்கும், 2023.05.01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் நுவரெலியா மாவட்டத்தில் நான்கு தளமாடிகளுக்கு மேற்பட்ட புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதை மட்டுப்படுத்தி நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவான ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கும் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. 1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கீழ்க்காணும் ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2326/40ஆம் இலக்க 2023.04.06ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்டுள்ள 2023ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள்.

2326/41ஆம் இலக்க 2023.04.06ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்.

**03. விவசாய வனவியல் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கான சர்வதேச நிலையம் (ICRAF) மற்றும் உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனம் (GGGI) ஆகியவற்றுக்கு இலங்கை அரசால் வழங்கப்பட்டுள்ள விடுபாட்டுரிமைகள் மற்றும் சிறப்புரிமைகள்**

இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எமது நாட்டில் இயங்கி வருகின்ற சர்வதேச அமைப்புகளுக்கு வழங்கப்படுகின்ற சிறப்புரிமைகள் மற்றும் விடுபாட்டுரிமைகளை அரச வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிட்டு பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதற்கமைய, ICRAF மற்றும் GGGI இற்குமிடையில் கையொப்பமிடப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் சரத்துகளுக்கமைய குறித்த சிறப்புரிமைகள் மற்றும் விடுபாட்டுரிமைகளை அரச வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடுவதற்கும், குறித்த தகவல்களைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவும் வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. 1985ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தை திருத்தம் செய்தல்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக சட்டத்தைத் திருத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவிரோதமாக வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தொழிலுக்குப் பிரவேசித்துள்ள தரப்பினர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, உப முகவர்கள் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக இணைத்துக்கொள்கின்ற செயன்முறையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறையில் புலம்பெயர் தொழிலாளர்களை ஆபத்துக்குள்ளாக்குகின்ற பாரியளவிலான மோசடிகள் மற்றும் ஊழல்களைக் குறைப்பதற்கு இயலுமை கிட்டும் வகையில் புதிய சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தவும் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கும், அதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. இலங்கையில் பொருளாதார நிலைபேறு மற்றும் மீட்பு வேலைத்திட்டத்திற்காக உலக வங்கியின் அபிவிருத்தி நிதியிடல் வேலைத்திட்டத்தின் ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்ளல்**

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன்வசதி வேலைத்திட்டத்திற்கமைய இலங்கை அரசால் பேரண்டப் பொருளாதார சவால்களுக்குத் தீர்வுகளை வழங்கும் நோக்கில் தேவையான மறுசீரமைப்புகளுடன் விரிவான பொருளாதார நிலைபேறு மற்றும் மீட்பு வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த வேலைத்திட்டத்திற்காக அபிவிருத்திக் கொள்கை நிதியிடல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு உலக வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, பொருளாதார கட்டுப்பாடு, பரிமாற்றம், வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மையை அதிகரித்தல் மற்றும் வறுமைப்பட்டவர்கள் மற்றும் இடர்களுக்கு உள்ளாகியவர்களைப் பாதுகாத்தல் போன்ற பிரதான 03 துறைகளின் அடிப்படையில் உலக வங்கி தனது ஒத்துழைப்புகளை வழங்குகின்றது. முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு செயன்முறையை ஜனாதிபதி செயலகத்தால் மேற்கொள்வதற்கும், குறித்த நிதியொதுக்கீடு பற்றி உலக வங்கியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. நிதித்துறைப் பாதுகாப்பு வலையமைப்புக் கருத்திட்டத்திற்கான உலக வங்கி நிதியைப் பெற்றுக்கொள்ளல்**

நிதித்துறைப் பாதுகாப்பு வலையமைப்புக் கருத்திட்டத்தின் கீழ் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதிக்காக உலக வங்கியின் கடன்வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. நிலைபேற்றுத்தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் ஆரோக்கியமான நிதி இடைநிலை முறைமையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இயலுமை கிட்டும் வகையில் நிதித்துறையின் பலம் மற்றும் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் வைப்புக் காப்புறுதி உத்தேச முறைமையை இலக்காகக்கொண்டு இலங்கை நிதித்துறைப் பாதுகாப்பு வலையமைப்பின் நிதி மற்றும் நிறுவன ரீதியான இயலளவை வலுப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள கடன்தொகையை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனையைக் கருத்திற்கொண்டு, முதலீட்டுக் கருத்திட்ட நிதியிடலாக 150 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் உலக வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

**07. பொருளாதார நிலைபேற்று வேலைத்திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொள்கையை அடிப்படையாகக்கொண்ட விசேட கடன்வசதியைப் பெற்றுக்கொள்ளல்**

சர்வதேச நாணய நிதியத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நீடிக்கப்பட்ட நிதி வசதிகளுக்கு இணையாக இலங்கையின் நிலைபேற்றுத்தன்மை மற்றும் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியால் 350 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கொள்கையை அடிப்படையாகக்கொண்ட விசேட கடன்வசதி மற்றும் 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தொழில்நுட்ப உதவித் தொகையை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கடன்தொகையை பெற்றுக்கொள்வதற்காக தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. வர்த்தமானி அறிவித்தல்களை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

கீழ்க்காணும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகள்/விதிமுறைகள்/ஒழுங்கு விதிகள்/அறிவித்தல்களை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறிவீட்டுச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 2312/67ஆம் இலக்க 2022.12.31ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகள்.

முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 2312/73 ஆம் இலக்க 2022.12.31ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள கட்டளை.

மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட 2312/70ஆம் இலக்க 2022.12.31ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 07/2022ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்.

புகையிலை வரிச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள 2312/71ஆம் இலக்க 2022.12.31ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்.

உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள 2312/68ஆம் இலக்க 2022.12.31ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகள்.

நிதிச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள 2309/37ஆம் இலக்க 2022.12.09ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் 2314/16ஆம் இலக்க 2023.01.11ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்.

நிதிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 2312/80 ஆம் இலக்க 2023.01.01ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்.

நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்டுள்ள 2312/69ஆம் இலக்க 2022.12.31ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தல்கள் மற்றும் 2318/53ஆம் இலக்க மற்றும் 2023.02.10ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தல்கள்.

இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள 2316/32ஆம் இலக்க 2023.01.26ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்.

**09. புதிய தேசிய கல்விக் கொள்கைச் சட்டகத்தை தயாரித்தல்**

நாட்டின் பொருளாதார நிலைபேற்றுத்தன்மையை அடையும் செயன்முறையில் துரிதமாக மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்தவேண்டிய முக்கிய துறையாக கல்வித்துறையை அரசு அடையாளங்கண்டுள்ளது. அதற்கமைய, குறித்த அனைத்துப் பங்கீடுபாட்டாளர்களின் ஒத்துழைப்புடன் புதிய கல்விக் கொள்கைச் சட்டகத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. அடுத்துவரும் 25 ஆண்டுகளுக்கான தேசியக் கல்விக் கொள்கைச்சட்டகம் மற்றும் ஏற்புடைய அனைத்து மறுசீரமைப்புகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து முன்னுரிமை அடிப்படையில் அமுல்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்காக ஜனாதிபதி தலைமையில் மற்றும் பிரதமர் மற்றும் கல்வி அமைச்சரின் பங்கேற்புடன் 10 உறுப்பினர்களுடன் கூடிய அமைச்சரவை உபகுழுவை நியமிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. பாராளுமன்ற வரவு-செலவுத்திட்ட அலுவலகத்தை தாபிப்பதற்கான சட்டமூலம்**

பாராளுமன்ற வரவு-செலவுத்திட்ட அலுவலகத்தை தாபிப்பதற்கான சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2022.12.05ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்குமான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# தர்மாசார்யா சித்தியடைந்தவர்களை நியமிக்கும் போட்டிப் பரீட்சை 2018

## 4 வருடங்கள் கடந்தும் நேர்முகப் பரீட்சை நடைபெறவில்லையென பரீட்சார்த்திகள் கவலை

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

2087ஆம் இலக்க 2018.08.31ஆம் திகதியிட்ட இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின்படி "அகில இலங்கையில் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் சமய பாடங்கள் கற்பிப்பதற்கான ஆசிரிய வெற்றிடங்களுக்கான இலங்கை ஆசிரிய சேவையில் - இரண்டாம் தரத்திற்கு தர்மாசார்யா சித்தியடைந்தவர்களை நியமிக்கும் திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2019)" இலங்கைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கடந்த 2019.05.25ஆம் திகதியன்று நடத்தப்பட்டது.

அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் நடைமுறைப் பரீட்சைகள் தகைமைகளைச் சரிபார்க்கும் நேர்முகத் தேர்வுகள் 2020.02.27 அன்று கல்வி அமைச்சில் நடைபெறும் என குறித்த அமைச்சிடமிருந்து பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டபோதிலும் தவிர்க்க முடியாத காரணங்களால் மீண்டும் குறித்த நேர்முக பரீட்சை மற்றும் செயல் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளன என அமைச்சின் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் இதுவரை இது குறித்து எந்தவொரு தகவலும் இல்லையெனவும் இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் ஆராய்ந்து தமக்கான தீர்வை விரைவில் வழங்குமாறு குறித்த பரீட்சையில் தோற்றி சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

ஸ்ரீ ලංකා මහ බැංකුව இலங்கை மத்திய வங்கி CENTRAL BANK OF SRI LANKA

**25.04.2023 நாணய மாற்று வீதம்**

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 1 7 3066 | 110 0551 |
| கனேடியன் டொலர் | 118 7735 | 133 047 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 33 5506 | 37 1146 |
| யூரோ | 234 68 6 | 253 4 48 |
| ஜப்பான் யென் | 1 2160 | 1 3433 |
| சிங்கப்பூர் டொலர் | 123 0043 | 136 4144 |
| ஸ்ரேலிங் பவுன் | 28 6562 | 300 3881 |
| சுவிஸ் பிரான்ங் | 24 853 | 262 00 3 |
| ஐ.அ.டொலர் | 202 1556 | 217 43 6 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 742 5264 |
| குவைட் | குவைட் தினார் | 0, 4 3557 |
| ஓமான் | ஓமான் றியால் | 724 7548 |
| கட்டார் | கட்டார் றியால் | 77 1173 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 74 6885 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 76 518 |

# சட்டத்தரணி வீட்டின் நாய்க்கு விஷம் வைத்து கொலைசெய்த மற்றுமொரு சட்டத்தரணி கைது!

உயர் நீதிமன்றின் முன்னாள் நீதியரசர் ஒருவரின் புதல்வரான சட்டத்தரணியின் வீட்டில் வளர்க்கப்பட்ட நாய்க்கு விஷம் வைத்து கொன்றார் என்ற சந்தேகத்தின்பேரில் உயர் நீதிமன்றின் பெண் சட்டத்தரணியொருவர் நேற்று (25) கைதுசெய்யப்பட்டதாக கஹதுடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சட்டத்தரணி மத்தேகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிரிவத்துடுவ, தலகலவத்த பிரதேசத்திலுள்ள மனுதாரரான சட்டத்தரணியின் வீட்டைச் சுற்றி கடந்த 12ஆம் திகதி பல இடங்களில் சந்தேகத்திற்கிடமான வகையில் சிறிய அளவிலான சில பொதிகள் கிடந்துள்ளன. அதனைப் பார்த்த பணிப்பெண் சட்டத்தரணிக்கு அறிவித்து, தேடிப்பார்த்தபோது திடீரென வீட்டில் இருந்து நாய் ஓடிவந்து தரையில் மயங்கி விழுந்துள்ளது.இதனையடுத்து, கால்நடை மருத்துவரை வீட்டுக்கு வரவழைத்து நாயை பரிசோதித்தபோது, குறித்த நாய் ஒருவகை விஷத்தை உட்கொண்டதால் இறந்ததுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வீட்டில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கெமராவில் கடந்த 12ஆம் திகதி பதிவான காட்சிகளை ஆய்வுசெய்தபோது, வீட்டின் முன்புறம் உள்ள பிரதான வாயில் அருகே சிவப்பு நிற காரில் வந்திறங்கிய ஒருவர் தோட்டத்துக்குள் சில பொருட்களை வீசுவது தெரியவந்தது.

இதனடிப்படையில், கஹதுடு பொலிஸ் நிலையத்துக்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் சிசிடிவி சாட்சியங்களைக் கொண்டு விசாரணைகளை முன்னெடுத்ததில் குறித்த கார் உயர்நீதிமன்றத்தில் கடமையாற்றும் பெண் சட்டத்தரணி ஒருவருக்கு சொந்தமானது என தகவல் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி, சந்தேகநபரான சட்டத்தரணியை நேற்று பொலிஸ் நிலையத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதன்பிரகாரம் வருகைதந்த அவரிடம் வாக்குமூலம் பதிவுசெய்த பொலிஸார் அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.

இதேவேளை, ஐந்து வருடங்களுக்கு முன்னர் முறைப் பாட்டாளரான சட்டத்தரணியைக் கொல்லும் நோக்கில் நான்கு பேர் அவரது வீட்டிற்கு வந்து வன்முறையில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. மனுதாரரான சட்டத்தரணி மறைந்த பிரபல உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் மகன் எனத் தெரியவந்துள்ளது.

# புத்தூரில் மருத்துவருக்கு அச்சுறுத்தல்

## பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லையென குற்றச்சாட்டு



வைத்தியருக்கு அச்சுறுத்தல் விடுத்து, அவரது கடமைக்கு இடையூறு விளைவித்தவர்களை பொலிஸார் கைதுசெய்ய தவறியமையை கண்டித்து, புத்தூர் ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவினர் தமது மருத்துவ சேவைகளை இடைநிறுத்த தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புத்தூர் ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிலையத்திற்கு அருகில் கடந்த 10ஆம் திகதி நடத்தப்பட்டதாக தாக சாந்தி நிலையத்தில் சத்தமாக பாடல்கள் ஒலிக்கவிடப்பட்டன. அதனால், தனது கடமைக்கு இடையூறு ஏற்படுவதாகவும், பாடலின் சத்தத்தைக் குறைக்குமாறும் தாக சாந்தி நிலையத்தில் நின்றவர்களிடம் மருத்துவர் தெரிவித்துள்ளார்.

அதனை அவர்கள் பொருட்படுத்தாது இருந்துள்ளனர். அதன்பின் குழு ஒன்று மருத்துவருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

அதனையடுத்து மருத்துவர், தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை மற்றும் கடமைக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாடு செய்யப்பட்டு இரண்டு கிழமைகள் கடந்த நிலையிலும் இதுவரை பொலிஸார் நடவடிக்கை எதுவும் எடுக்காதமையைக் கண்டித்தும் மருத்துவருக்கு அச்சுறுத்தல் விடுத்தவர்களை கைதுசெய்யுமாறும், சுகாதார பராமரிப்பு நிலையத்தில் பணியாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கோரி தமது மருத்துவ சேவைகளை புறக்கணிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board — திங்கட்கிழமை 2023.04.24 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5096 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,860,012.00 — ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 5 9 0 0 0 2

**கொவிசெத** Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3338 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 98,400,617.04 — ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 03 47 57 62

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1551 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,070,239.20 — வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 7 9 7 2 2 9

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1126 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 87,385,309.20 — ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 29 38 65 71

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 405 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,768,193.20 — வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 08 20 46 57 — விசேட இலக்கினம் மேஷம்

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1444 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 316,687,354.00 — ஆங்கில எழுத்து L — சுப்பர் இலக்கம் 08 — வெற்றி இலக்கங்கள் 27 31 41 58 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

## வவுனியா - கட்டையர்குளத்தில் சட்டவிரோத காடழிப்பு:

# பொலிஸாரும், வன இலாகாவும் நடவடிக்கை எடுக்கவில்லையென கிராம மக்கள் குற்றச்சாட்டு

*(வவுனியா நிருபர்)*

வவுனியா, கட்டையர்குளம் பகுதியில் 12 ஏக்கர் காடு சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுள்ளபோதும் இது தொடர்பில் பொலிஸாரும், வன இலாகாவும் நடவடிக்கை எடுக்கவில்லை என அப்பகுதி கிராம மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வவுனியா, ஈச்சங்குளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள கட்டையர்குளம் பகுதியில் வன இலாகாவுக்குச் சொந்தமான 12 ஏக்கர் காட்டுப்பகுதி கடந்த சில நாட்களாக கிராம அலுவலர் இருவரின் ஆதரவுடன் அழிக்கப்பட்டு வருகின்றது.



இது குறித்து அரச அதிகாரிகள் பலருக்கும் கடந்த சில நாட்களுக்கு முன்னரே மக்கள் முறையிட்டும் குறித்த காடழிப்பு தடுத்து நிறுத்தப்படவில்லை என கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை (23) இரண்டு கிராம அலுவலர்களின் பிரசன்னத்துடன் குறித்த பகுதியில் காடழிப்பு மற்றும் அதனுடன் இணைந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டபோது அங்கு சென்ற கிராம மக்கள் அதனை தடுத்து நிறுத்தியுள்ளதுடன், இது தொடர்பில் ஈச்சங்குளம் பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்திருந்தனர். இருப்பினும், பொலிஸார் தமது முறைப்பாட்டை பதிவுசெய்யவில்லை என கிராம மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

காடழிப்பு இடம்பெற்ற போது குறித்த பகுதிக்கு தமது பகுதியில் இல்லாத வாகனங்கள் சில வந்து சென்ற தாகவும் கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப் பகுதியானது வரை படத்தில் காட்டுப் பகுதியாக காணப்படுகின்றபோதும் எவருடைய அனுமதியும் பெறப்படாது சில அதிகாரிகள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி காடழிப்பில் ஈடு படுகின்றார்களா அல்லது காடழிப்புக்குத் துணை போகின்றார்களா என கிராம மக்கள் கேள்வி எழுப்பியுள்ளதுடன், இது தொடர்பில் அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பிரதேச செயலாளர், வவுனியா மாவட்ட செயலாளர், வனஇலாகா ஆகியோருக்கும் கிராம மக்களால் நேற்று முன்தினம் (24) எழுத்துமூலம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களை இலக்குவைத்து மாவா போதை பாக்கு விற்பனை



ஊரெழு மற்றும் உரும்பிராய் பகுதிகளில் பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து மாவா போதை பாக்கை விற்பனைசெய்து வந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து 100 ரூபா பெறுமதியான 250 மாவா போதை பாக்கு பக்கெட்டுகள் கோப்பாய் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஊரெழுவைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவரே இவ்வாறு நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதே குற்றச்சாட்டில் சந்தேக நபரின் உறவினர்கள் முன்னர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.

# சாவகச்சேரியில் மோட்டார்சைக்கிள் திருடியவர் மீது தாக்குதல்

*(சாவகச்சேரி நிருபர்)*

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை பகுதியிலுள்ள ஆலயமொன்றில் நின்ற மோட்டார்சைக்கிளைத் திருடிய நபர் மீது பிரதேச இளைஞர்கள் தாக்குதல் நடத்தியதில் மேற்படி நபர் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (23) இரவு ஆலயமொன்றின் முன்பாக நிறுத்திவைக்கப் பட்டிருந்த மோட்டார்சைக்கிளை எடுத்துக் கொண்டு தப்பித்துச்செல்ல முற்பட்ட நபர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் படுகாயமடைந்த நபர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்

# வயோதிபப் பெண்ணை அறைக்குள் பூட்டிவிட்டு கொள்ளையிட முயன்றவர் யாழில் மடக்கிப்பிடிப்பு

*(யாழ். நிருபர்)*

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் வயோதிபப் பெண்மணியை வீட்டின் அறையொன்றினுள் வைத்து பூட்டிவிட்டு , வீட்டினுள் சல்லடை போட்டு தேடிய நபர் ஒருவரை ஊரவர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

திருநெல்வேலியில் வயோதிபப் பெண்மணி வசிக்கும் வீடொன்றினுள் நேற்று (25) செவ்வாய்க்கிழமை காலை அத்துமீறி நுழைந்த நபர் ஒருவர், வீட்டில் இருந்த வயோதிபப் பெண்ணை அறை ஒன்றினுள் வைத்து பூட்டிவிட்டு, வீட்டினுள் சல்லடை போட்டு தேடுதல் நடத்தியுள்ளார்.

அவ்வேளை, அறையினுள் பூட்டப்பட்டிருந்த பெண்மணி அபாய குரல் எழுப்பவே, அயலவர்கள் வீட்டுக்குச் சென்றபோது, வீட்டினுள் இருந்து நபர் ஒருவர் தப்பியோடியுள்ளார்.

அதனையடுத்து வீட்டினுள் சென்று பார்த்தபோது வயோதிபப் பெண் அறை ஒன்றினுள் வைத்து பூட்டப்பட்டு இருப்பதனை அவதானித்து அறையைத் திறந்து அவரை காப்பாற்றியுள்ளனர்.

அதேவேளை, வீட்டிலிருந்த பொருட்கள் கலையப்பட்டிருந்தன. அதயைடுத்து , வீட்டிலிருந்து தப்பிச்சென்ற நபரை ஊரவர்கள் தேடி மடக்கிப் பிடித்து விசாரணைகளை மேற்கொண்டபோது, அந்நபரிடம் 25 ஆயிரம் ரூபா பணம் மற்றும் அவரது பையில் பித்தளைப் பொருட்கள் சிலவும் காணப்பட்டுள்ளன. குறித்த நபரிடம் தன்னை அடையாளப்படுத்தக்கூடிய எந்த ஆவணங்களும் இருக்கவில்லை.

அதனையடுத்து கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கி, பொலிஸாரிடம் அந்நபரை ஒப்படைத்துள்ளனர். அந்நபரை கைதுசெய்த கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை நெடுந்தீவு பகுதியில் வயோதிபர்கள் ஐவர் படுகொலைசெய்யப்பட்டு, அவர்களின் நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்தச் சம்பவம் குறித்த வீட்டின் அருகில் வசிக்கும் அயலவர்கள் மத்தியில் மேலும் பயத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# காலணி வாங்கிக் கொடுக்காததால் 14 வயது மாணவன் தற்கொலை!

*(வட்டுக்கோட்டை நிருபர்)*

உதைபந்தாட்டத்துக்குத் தேவையான காலணியை தந்தை வாங்கிக் கொடுக்கவில்லை யென 14 வயது மாணவன் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட் பட்ட, வட்டுக்கோட்டை மேற்கு பகுதியில் வசித்துவந்த குறித்த மாணவனே நேற்று முன்தினம் (24) இரவு இவ்வாறு தூக்கிட்டு உயிரை மாய்த்துள்ளார்.

குறித்த மாணவனது குடும்பத்தின் வறுமைநிலை காரணமாக தந்தையால் உடனடியாக காலணியை வாங்கிக் கொடுக்க முடியவில்லை. இந்நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாணவனது சடலம் பிரேதபரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிந்தாங்கட்டி பகுதி மக்களுக்கு சுத்தமான குடிநீர் விநியோகத் திட்டம்

## அமைச்சர் ஜீவனால் கையளிப்பு





மாத்தளை மாநகரசபைக்குட்பட்ட களுதாவளை 2ஆம் வட்டாரம், சிந்தாங்கட்டி குமர பெருமாள் கோவிலை அண்மித்த பகுதிகளில் வாழும் மக்களுக்கு சுத்தமான குடிநீர் விநியோகத் திட்டத்தை கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சிந்தாங்கட்டி குமர பெருமாள் கோயிலை அண்மித்த பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. குடிநீர் வசதி இன்மையால் அப்பகுதி மக்கள் சொல்லொணாத் துயரங்களை பல வருடங்களாக சந்திக்க நேரிட்டது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் அண்மையில் மாத்தளைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது களுதாவளை பகுதி மக்களையும் நேரில் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது மக்கள் முன்வைத்த குடிநீர் வேலைத்திட்டம் நிச்சயம் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் உறுதியளித்திருந்தார்.

இந்த உறுதிமொழியின் பிரகாரம் அந்த மக்களுக்கு குடிநீர் பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ளது.

குடிநீரை மக்கள் மயப்படுத்தும் நிகழ்வு சிந்தாகட்டி குமர பெருமாள் கோவிலை அண்மித்த பகுதியில் நடைபெற்றது.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

அத்தோடு, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளருமான எம்.ராமேஷ்வரன், மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கோட்டேகொட, மாத்தளை மாநகர முன்னாள் மேயர் சந்தானம் பிரகாஷ் மற்றும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் சிவஞானம் ஆகியோரும் பங்கேற்றனர்.

தமது கோரிக்கையை ஏற்று குடிநீரைப் பெற்றுக்கொடுக்க துரித நடவடிக்கை எடுத்த அமைச்சருக்கு, மக்கள் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com



வட்டவளை தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் 23 ஆண்டுகளின் பின்னர் ஹட்டன் ஹில் வீவ் ஹோட்டலில் அண்மையில் சந்திப்பொன்றை நடத்தினர். இதன்போது அதிபர், ஆசிரியர்களுக்கான கௌரவமும் இடம்பெற்றது.

## தோட்ட சேவையாளர் சங்க மே தினக் கூட்டம்

*(மனூர சுதத் செல்லஹேவா)*

இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் மேதினக் கூட்டம் அதன் தலைவர் நிஷாந்த வன்னியாராச்சி, செயலாளர் றொபட் பிரான்சிஸ் ஆகியோரின் தலைமையில் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி ஹட்டன் டி.கே. டபிள்யு. மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 09 மணிக்கு ஹட்டன் நகாில் பேரணியொன்றும் நடத்தப்படவுள்ளது. தோட்ட சேவையாளர் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 12 கிளைகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் அதில் கலந்துகொள்ளவுள்ளதாக அதன் தேசிய அமைப்பாளர் சுதாகரன் மாரிமுத்து தொிவித்தார்.



சுபஹ் தொழுகைக்கு கடந்த 6 மாத காலமாக தொடர்ச்சியாக வருகைதந்து இமாம் ஜமாஅத் உடன் கலந்துகொண்டு தொழுகையை நிறைவேற்றிய 7 வயதுடைய அம்ஹர் அதீக், செய்த் ரில்மி, அகில் அக்ரம் ஆகிய மூன்று சிறார்களுக்கு மாத்தளை கொங்காவலை ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபையினர் பணம் மற்றும் பரிசுப்பொருட்களை வழங்கி கௌரவித்தனர். பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவரும் ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரலுமான ஸவீர், பள்ளிவாசலின் பேஸ் இமாம் மௌலவி சப்ரீன் (ஹலீமி) பரிசில்களை வழங்குவதை படங்களில் காணலாம். (படங்கள்: எம்.எஸ்.எம்.மஸாஹிம்)

# அதிக விலைக்கு மாத்தளையில் பொருள் விற்பனை குறித்து விசனம்

*(மாத்தளை செய்தியாளர் )*

அரசால் சமையல் எரிவாயு உட்பட ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளபோதிலும் மாத்தளை மாவட்டத்தில் பேக்கரி உற்பத்தியாளர்களும் ஹோட்டல் உரிமையாளர்களும் தங்களது உற்பத்திப் பொருட்களின் விலைகளைக் குறைக்காமல் தன்னிச்சைப்படி விற்பனை செய்வதால் அரசால் குறைக்கப்பட்ட பொருட்களின் விலைகளின் நன்மைகள் பொதுமக்களுக்கோ நுகர்வோருக்கோ சென்றடையாமல் குறைக்கப்பட்ட மொத்த நன்மைகளையும் பேக்கரி உட்பத்தியாளர்களும் ஹோட்டல் உரிமையாளர்களுமே அனுபவித்து வருவதாக மாத்தளை மாவட்ட பொதுமக்கள் மற்றும் நுகர்வோர் தெறிவிக்கின்றன.

அரசு விலை குறைப்பை ஏற்படுத்த முன் பேக்கரி உட்பத்திகளும் ஹோட்டல் உற்பத் திகளும் எந்த விலைகளில் இருந்ததோ அதே விலைகளையே இன்றும் இம்மாவட்டத் தில் காணக்கூடியதாக உள்ளது. பேக்கரி மற்றும் ஹோட்டல் உற்பத்திகளுக்குத் தேவையான கோதுமை மா, சீனி மற்றும் சமையல் எரிவாயு களில் விலைகள் குறைக்கப்ட்டுள்ளபோதும் தங்களின் உட்பத்திகளை விலைக்குறைக் காமல் விற்பனை செய்வதன் நோக்கம் என்ன என்பது குறித்து ஹோட்டல் மற்றும் பேக்கரி உரிமையாளர்களிடம் வினவினால் கோதுமை மா, சீனி மற்றும் சமையல் எரிவாயுகளின் விலைகள் குறைக்கப்பட்ட போது எமது உற்பத்திகளுக்குத் தேவையான ஏனைய மூலப்பொருட்களின் விலைகள் குறைக்கப்படாததால் எமது உற்பத்திகளை அரசும் பொதுமக்களும் விரும்புவது போன்று விலை குறைத்து விற்பனை செய்ய முடியாது என இவர்கள் தெறிவிக்கின்றன.

இது சம்பந்தமாக கருத்துத் தெரிவிக்கும் பொதுமக்கள், அரசு ஏதாவது பொருட்களின் விலைகளை அதிகரித்தால் இரவோடு இரவாக விலைகளை அதிகரித்து விற்பனை செய்யும வர்த்தகர்கள் விலைகள் குறைக்கப்பட்டபோது அதன் பயன்களை மக்களுக்கு சென்றடையாமல் செயல்படுவது மனிதநேயத்துக்கு முற்றிலும் மாற்றமான செயல்கள் எனவும் பொதுமக்கள் தெறிவிக்கின்றன.

அரசு பொருட்களின் விலைகளை குறைத்து மக்களின் அன்றாட வாழ்வாதாரச் சுமைகளை குறைத்திட பல பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றபோது அரசின் நல்லெண்ணச் செயல்களை மக்கள் மனதில் மாசு ஏற்படுத்தி ஆட்சியில் இருக்கும் அரசை அசௌகரியத்தில் ஏற்படுத்தி அரசு மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையை இல்லாதொழிக்க மேற்படி வர்த்தகர்கள் திட்டமிட்டு செயல்படுவதாகவும் மேற்படி வர்த்தகர்களின் தன்னிச்சையான செயல்களை நுகர்வோர் அதிகாரசபையினர் கண்டும் காணாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயம் என தெரிவிக்கும் பொதுமக்கள், அரசும் மாத்தளை மாவட்ட ஆளுங்கட்சி அரசியல் பிரமுகர்களும் இது குறித்து உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

# முற்றாக முடங்கிய வடக்கு மாகாணம்







யாழ்ப்பாணம்





மன்னார்








சங்கானை





சாவகச்சேரி






வவுனியா



மானிப்பாய்





நெல்லியடி





முல்லைத்தீவு

அரசாங்கத்தால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு மாற்றாக புதிதாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், முப்படையினரின் காணி அபகரிப்பு உட்பட மதஸ்தலங்கள் தாக்கப்படுகின்றமை, தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பகுதியில் திட்டமிட்டு இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்கக் கோரியும் வடக்கு, கிழக்கில் ஹர்த்தால் போராட்டம் நேற்று (25) முன்னெடுக்கப்பட்டது.

வடமாகாணம் தழுவிய ஹர்த்தால் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக மாகாணத்தில் பல்வேறு பகுதிகளும் முற்றாக முடங்கின.

அந்தவகையில் யாழ்ப்பாணம், மானிப்பாய், சங்கானை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைதீவு பகுதிகளில் முழுமையாக வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்ததுடன், பொதுமக்கள் உட்பட அனைவரும் பூரண ஆதரவு வழங்கினர்.






கிளிநொச்சி

# புதிய பயங்கரவாத சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிழக்கில் ஹர்த்தால் அனுஷ்டிப்பு




வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்டுவரும் சிங்கள பௌத்த மயமாக்கலை கண்டித்தும் கொண்டுவரப்படவுள்ள புதிய பயங்கரவாத சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை (25) ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது வர்த்தக நிலையங்கள் கடையடைப்பு செய்தும் முச்சக்கரவண்டி நிலையங்கள் இயங்காமலும் தனியார் நிலையங்கள் பூட்டப்பட்டும் காணப்பட்டதுடன், பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகையும் குறைவாகவே காணப்பட்டது. இந்நிலையில், அரச அலுவலகங்கள் திறந்திருந்தபோதிலும் பொதுமக்கள் சமுகமளித்திருக்கவில்லை. அத்துடன், அரச வாகனங்களின் போக்குவரத்து மந்தகதியில் இயங்கினாலும் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடவில்லை. தமிழ்த் தேசிய பரப்பில் ஹர்த்தாலுக்கு தமிழ், முஸ்லிம் கட்சிகள், பொது அமைப்புகள், தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள், சமய அமைப்புகள், சட்டத்தரணிகள் என அனைத்து தரப்பினரும் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

(வாழைச்சேனை செய்தியாளர்)




அரசினால் கொண்டுவரப்படவுள்ள புதிய பயங்கரவாதச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பு, செங்கலடி பகுதியில் வர்த்தக நிலையங்களை மூடி செவ்வாய்க்கிழமை (25) ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஏறாவூர் 5ஆம் குறிச்சி, கொம்மாந்துறை, ஆறுமுகத்தான் குடியிருப்பு, தன்னாமுனை ஆகிய பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. செங்கலடி பகுதியில் சந்தைக் கட்டிடத்தொகுதியும் முற்றாக முடங்கியிருந்தது. பாடசாலைகளில் ஆசிரியர், மாணவர்களின் வரவு மிகக் குறைவாகக் காணப்பட்டதுடன், தனியார் அரச வங்கிகள், அரச திணைக்களங்கள் வழமைபோன்று இயங்கியதுடன், எரிபொருள் நிலையமும் திறந்திருந்தது. (செங்கலடி செய்தியாளர்)





தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள கட்சிகளின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கில் பௌத்த - சிங்கள இராணுவ மயமாக்கும் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராகவும், புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கெதிராகவும் மேற்கொள்ளப்பட்ட பொது முடக்கம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் இயங்காத நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை(25) காணப்பட்டது. இதனால் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை தராததால் பாடசாலைகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. மட்டக்களப்பு நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்த அதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியாருக்குச் சொந்தமான பஸ்கள் குறைவாகப் பயணத்தினை மேற்கொண்டிருந்த நிலையில், அவற்றில் குறைந்தளவான பயணிகளே பயணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. வங்கிகள் மற்றும் தபால் நிலையங்கள் காலையில் திறந்திருந்தபோதிலும் வாடிக்கையாளர்கள் வருகை குறைந்த நிலையில் காணப்பட்டமையை அவதானிக்க முடிந்தது.

(கல்லடி, வெல்லாவெளி செய்தியாளர்கள், கனகராசா சரவணன்)




அரசாங்கத்தால் கொண்டுவரப்படவுள்ள உத்தேச பயங்கரவாதச் சட்டத்தை எதிர்த்து வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் செவ்வாய்க்கிழமை (25) முன்னெடுக்கப்பட்ட நிர்வாக முடக்கலால் களுவாஞ்சிக்குடி நகரம் முற்றாக முடங்கியிருந்தது. பொதுச்சந்தை உள்ளிட்ட பிரதான வர்த்தக நிலையங்கள், கடைகள் அனைத்தும் திறந்திருக்கப்படவில்லை. அதேவேளை, பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் சென்றிருந்தபோதிலும் மாணவர்கள் சென்றிருக்கவில்லை. அரச மற்றும் தனியார் வங்கிகள் இயங்கவில்லை. எனினும், மருந்தகங்கள், வைத்தியசாலைகள் என்பன வழமைபோன்று இயங்கியதையும், ஒருசில தனியார் மற்றும் இ.போ.ச. சேவைகள் இயங்கியதையும் அவதானிக்க முடிந்தது.

(மட்டக்களப்பு, பாண்டிருப்பு செய்தியாளர்கள்)






புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நேற்று செவ்வாய்க்கிழமை (25) முன்னெடுக்கப்படும் சிங்கள - பௌத்த மயமாக்கலை கண்டித்தும் தமிழ்த் தேசிய பரப்பில் முன்னெடுக்கப்படும் கடையடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் ஹர்த்தாலுக்கு மட்டக்களப்பு மாவட்ட களுவாஞ்சிக்குடி, கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளில் கடைகள், சந்தைகள் அடைக்கப்பட்டு வீதி வெறிச்சோடிக் காணப்பட்டது. பட்டிருப்புபாலம் மற்றும் மண்முனை மேற்கு பாலத்திலும் பொதுமக்கள் இல்லாமல் வெறிச்சோடிக்காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. (வெல்லாவெளி செய்தியாளர்)



பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், சிங்களமயமாக்கலை எதிர்த்து வடக்கு, கிழக்கில் செவ்வாய்க்கிழமை(25) பூரண ஹர்த்தால் இடம்பெற்றது. அந்தவகையில், திருகோணமலை மாவட்ட நகர்ப்பகுதி தமிழ், முஸ்லிம் மக்கள் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து அந்தப் பகுதியிலுள்ள சகல துறைகளும் முடங்கியிருந்தன. வர்த்தக நிலையங்கள், கடைகள் பூட்டப்பட்டு பாடசாலைகளுக்கு மாணவர்களும் வருகை தந்திருக்க வில்லை. மேலும், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப் படைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

( கி ண் ணி ய ா செய்தியாளர்)

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## ஹர்த்தாலுக்கு மத்தியில் அம்பாறையில் மக்கள் அன்றாட நடவடிக்கையில் ஈடுபாடு





(பாறுக் ஷிஹான்)

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள், பொது அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்த கோரிக்கையை அம்பாறை மாவட்ட மக்கள் நிராகரித்து வழமையான செயற்பாட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை(25) ஈடுபட்டிருந்தனர்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, பெரிய நீலாவணை, சவளக்கடை, சம்மாந்துறை, காரைதீவு, சாய்ந்தமருது, அக்கரைப்பற்று, நிந்தவூர், மத்தியமுகாம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்றையதினம் உணவகங்கள், புடவைக்கடைகள், வீதியோர வியாபாரங்கள், வங்கிகள், சந்தைகள் போன்றவை வழமைபோன்று இயங்கின.

இம்மாவட்டத்தில் வழமை போன்று அதிகளவிலான பொதுமக்கள் முண்டியடித்துக் கொண்டு பொருட்கொள்வனவில் ஈடுபட்டு வந்ததை அவதானிக்க முடிந்தது. இம்மாவட்டத்தின் பெரியநீலாவணை, ஒந்தாச்சிமடம், காரைதீவு, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர், அட்டப்பளம், சம்மாந்துறை, மாவடிப்பள்ளி, சவளக்கடை, மத்தியமுகாம் உள்ளிட்ட முக்கிய பிரதேசங்களில் மக்களின் நடமாட்டம் அதிகரித்து வழமைபோன்று செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

அத்தோடு பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களுக்குச் சென்று பொலிஸாருடன் இணைந்து கடற்படை, இராணுவம், பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டது. அத்துடன், கல்முனை பொதுச்சந்தை உட்பட அதனைச் சூழவுள்ள பாதையோரங்களில் மரக்கறி வியாபாரம் களைகட்டியிருந்தது.

மேலும் பாடசாலைகள், வியாபார நிலையங்கள், சுப்பர்மார்க்கெட்டுகள், பாமசிகள், வங்கிகள், எரிபொருள் நிலையங்கள் என்பன வழமைபோன்று திறக்கப்பட்டிருந்தன. எனினும், சில இடங்களில் பொதுமக்களின் வருகை இன்மையால் வியாபார நடவடிக்கைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## சம்புநகர் அல்-மினா வித்தியாலயத்தின் வித்தியாரம்ப விழா






(அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்குட்பட்ட அட்டாளைச்சேனை சம்புநகர் அல்-மினா வித்தியாலயத்தில் முதலாம் தர மாணவர்களை வரவேற்கும் "வித்தியாரம்ப விழா" செவ்வாய்க்கிழமை (25) பாடசாலை வளாகத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

தரம் ஒன்றுக்கான ஆசிரியர் எம்.ஏ.ஏ.அசீசின் நெறிப்படுத்தலில் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆரம்பப் பிரிவுக்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எஸ்.எல்.மன்சூர் பிரதம அதிதியாகவும், பாடசாலை மேம்பாட்டு உத்தியோகத்தரும் சேவைக்கால ஆசிரியர் ஆலோசகருமான எம்.எச்.ஹம்மாத், இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் தேசிய தலைவர் ஏ.பீ.கமால்டீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் ஏ.கே.றிஸ்னா, சிரேஷ்ட ஆசிரியர் எம்.எச்.அப்துல் ஹை, அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.ஏ.எம்.அறூஸ், ஏ.ஜீ.ஹம்சார் ஆகியோர் அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக அதிதிகளை வரவேற்கும் நிகழ்வைத் தொடர்ந்து இரண்டாம் தர மாணவர்கள் முதலாம் தர மாணவர்களுக்கு மாலை அணிவித்தும் பூக்கள் தூவியும் வரவேற்றனர்.

பின்னர் புதிதாக இணைந்துள்ள மாணவர்களை பாடசாலை ஒன்றுகூடல் மண்டபத்துக்கு அழைத்துச் சென்று பெற்றோர்கள் வரவேற்று இனிப்புப் பண்டங்கள் மற்றும் பரிசுப் பொதிகள் வழங்கினர். வருகைதந்த அதிதிகள் மாணவர்களுக்கு வித்தியாரம்பம் செய்துவைத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்துக்கு கனேடியத் தூதுவர் விஜயம்





(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வால்ஷ் மற்றும் அவரது குழுவினர் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு வருகைதந்ததுடன் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையிலான குழுவினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க் கிழமை(25) இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக் கப்பட்டதுடன், மாவட்டத்தில் உள்ள வளங்கள் தொடர்பில் கனேடியத் தூதுவர் அறிந்து கொள்வதற்காக மாவட்ட செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதீஸ் குமாரினால் முன்னளிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

மாவட்டத்தின் பிரதான உற்பத்தித் துறைகளான மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுற்றுலா உள்ளிட்ட அனைத்து துறைசார் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் கனேடியத் தூதுவருக்குத் தெளிவுபடுத்தினர்.

அத்துடன், கனேடியத் தூதுவரை கௌரவிக்கும் வகையில் மாவட்ட அரசாங்க அதிபரினால் நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட செயலக கணக்காளர் எம்.வினோத் மற்றும் மாவட்ட செயலக உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## ரயிலில் மோதுண்ட ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி



(கந்தளாய் செய்தியாளர்)

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ரயிலில் மோதுண்டு ஒருவர் பலத்த காயங்களுடன் கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று செவ்வாய்க் கிழமை(25) இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிச்சென்ற ரயிலில் மோதுண்டே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. கந்தளாய் பகுதியைச் சேர்ந்த அமில பிரசாத் கருணாரத்ன எனும் 34 வயதுடைய நபர் மோட்டார் சைக்கிளில் வீதியை கடக்க முற்பட்டபோதே ரயிலில் மோதுண்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

அதேவேளை, மோட்டார் சைக்கிள் பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ள அதேவேளை, விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொலிஸ் ஜீப் மற்றும் புடவைக்கடை தீச்சம்பவம்: முன்னாள் இராணுவச் சிப்பாய் உட்பட இருவர் கைது!

(கனகராசா சரவணன்)

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைத்திருந்த பொலிஸ் ஜீப் மற்றும் தம்பிலுவிலில் புடவைக்கடை ஒன்றுக்கு தீ வைத்து எரித்த குற்றச்சாட்டில் விநாயகபுரத்தைச் சேர்ந்த இருவரை திங்கட்கிழமை (24) கைது செய்துள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைத்திருந்த ஜீப் கடந்த மார்ச் 18ஆம் திகதி தீப்பற்றி எரிந்துள்ளதுடன் தம்பிலுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள புடவை விற்பனை கடை கட்டிடத்தொகுதி மார்ச் 23ஆம் திகதி அதிகாலை தீப்பற்றி எரிந்து சாம்பராகியது.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டு வந்தனர். இதன்போது, பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் திங்கட்கிழமை திருக்கோவில் 3ஆம் பிரிவைச் சேர்ந்த 21 வயதுடைய இராணுவத்தில் கடமையாற்றிய நிலையில் தலைமறைவாகி வந்துள்ள இராணுவ சிப்பாய் ஒருவரையும் திருக்கோவில் முதலாம் பிரிவைச் சேர்ந்த அவரது 20 வயது நண்பன் ஒருவரையும் அவர்களது வீடுகளில் வைத்து கைது செய்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவச் சிப்பாய், புடவைக்கடையில் கடமையாற்றி வந்த நிலையில், அங்கிருந்த புடவைகளை திருடிச் சென்ற சம்பவங்கள் காரணமாக அவருக்கான சம்பளத்தை வழங்காது அவரை கடை உரிமையாளர் வேலையிலிருந்து நிறுத்தியுள்ளார். இந்நிலையில் தனக்கான சம்பளத்தைக்கேட்டு முரண்பட்ட குறித்த முன்னாள் இராணுவச் சிப்பாய், அந்தக் கடைத்தொகுதிக்கு மார்ச் 23ஆம் திகதி அவரது நண்பருடன் சேர்ந்து பூட்டியிருந்த கடையின் கதவின் ஊடாக பெற்றோலை ஊற்றி தீ வைத்துவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

அவ்வாறே கடந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் தன்மீது பொலிஸார் பொய்க் குற்றம் சுமத்தி கைது செய்தமைக்கு பழிவாங்குவதற்காகவே பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைத்திருந்த பொலிஸ் ஜீப்க்கு தீ வைத்துவிட்டு தப்பியோடியுள்ளார்.

இவ்விரு சம்பவங்களையும் குறித்த இராணுவச் சிப்பாயே செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸ் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





பாலமுனை அல்-ஹிதாயா மகளிர் கல்லூரியில் தரம் ஒன்றுக்கான புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை(25) பாடசாலை அதிபர் பீ.முஹாஜிரீன் தலைமையில் நடைபெற்றது. (பாலமுனை செய்தியாளர்)



கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பேரமடுவ மற்றும் பேராறு - 2 ஆகிய கிராமங்களில் தோட்டச்செய்கை மேற்கொள்ளும் தெரிவு செய்யப்பட்ட 9 பயனாளிகளுக்கு தலா 50ஆயிரம் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்கள் அகம் மனிதாபிமான வள நிலையத்தினால் (AHRC) திங்கட்கிழமை(23) வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர், உதவி கணக்காளர், கள உத்தியோகத்தர், கந்தளாய் பிரதேச சிவில் அமைப்பின் இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (கந்தளாய் செய்தியாளர்)

## மட்டு. ஒல்லிக்குளத்தில் மாடுகளைத் திருடி விற்பனை செய்த கடை உரிமையாளர் கைது

(கனகராசா சரவணன்)

மாடுகளை திருடிச் சென்று அதனை இறைச்சியாக்கி விற்பனை செய்துவந்த மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர் ஒருவரை பொதுமக்கள் முற்றுகையிட்டு நையப்புடைப்பு செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (23) இரவு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஒல்லிக்குளம் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இதன்போது ஒரு தொகை மாட்டிறைச்சியையும் பிக்கப் ரக வாகனம் ஒன்றையும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களாக அந்தப் பகுதி மாட்டுப்பட்டிகளிலுள்ள மற்றும் வீடுகளில் வளர்த்துவரும் மாடுகள் மேய்ச்சலுக்காக சென்று மீண்டும் திரும்பிவராத நிலையில், அதனைத்தேடியும் கிடைக்காத நிலையே காணப்பட்டது. இந்நிலையில், அதன் உரிமையாளர்கள் சிலர், இதுவரை தமது 12 மாடுகள்வரை திருட்டுப் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில், ஒல்லிக்குளம் பிரதேசத்தில் இருவர் பங்காளிகளாக மாட்டிறைச்சிக்கடை நடத்திவரும் நிலையில், திருட்டுப்போன மாடுகளை அவர்கள் இறைச்சியாக்கி விற்பனை செய்துவருவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, குறித்த மாட்டிறைச்சிக்கடையை முற்றுகையிட்ட பொதுமக்கள் அங்கு அறுக்கப்பட்ட தமது மாடுகளின் தோல்கள் மற்றும் தலைகளை அடையாளம் கண்டு கொண்டனர்.

இதனையடுத்து, குறித்த கடை உரிமையாளரை பிடித்து நையப்புடைந்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். இந்நிலையில் குறித்த உரிமையாளரை கைது செய்ததுடன் இறைச்சிக்கடையின் குளிர்சாதனப்பெட்டியில் வைக்கப்பட்டிருந்த ஒருதொகை இறைச்சி உட்பட பிக்கப் ரக வாகனம் ஒன்றையும் பொலிஸார் மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்டவர் கடையின் பங்காளியான 48 வயதுடைய காத்தான்குடியைச் சேர்ந்தவர் எனவும் மற்றையவர் தொடர்ந்து தலைமறைவாகியுள்ளார் எனவும் இவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கைது செய்யப்பட்டவரை திங்கட்கிழமை(24) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் மே 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## போடியார் புலம்பல்!



**திருடர்களுடன் இணைந்து ஆட்சியமைக்கமுடியாதாம் எண்டு சரத்பொன்சேகா எம். பி. சொல்லிப்போட்டாரு எலுவா.? அப்ப நரியோட சேர்ந்து ஆட்சியமைக்கலாம்தானே, அந்த நரிக்கு வாய்ப்பக்குடுத்தவங்க இந்த திருடர்கள் எண்டத சரத் பொன்சேகா நல்லா அறிஞ்சிருந்தாலும் திருடர்கள ஆட்சில இருந்து அகற்றவே முடியாது. இன்னும் ரெண்டு வருடம் இந்த படம் ஓடத்தான் போகுது!**

கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

## சித்திரை வசந்தம் – 2023 மட்டக்களப்பில்

(கல்லடி செய்தியாளர்)

தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் இலங்கை பொலிஸ், இராணுவம், மட்டக்களப்பு பாடுமீன் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து நடத்தும் சித்திரை வசந்தம் - 2023 மிகவும் கோலாகலமாக மட்டக்களப்பில் ஞாயிற்றுக்கிழமை(30) இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிமுதல் இரவு 11.00 மணிவரை பல்வேறு பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகளும் மாலை நேர இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இஸ்லாமிய வரலாற்றுச் சொற்பொழிவு போட்டி நிகழ்ச்சியில் வெற்றியீட்டியோர் கௌரவிப்பு





(பாலமுனை செய்தியாளர்)

பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டில் புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு நடைபெற்ற இஸ்லாமிய வரலாற்றுச் சொற்பொழிவையும் போட்டி நிகழ்வையும் நடத்தி முடித்த உலமாக்கள் மற்றும் வெற்றிபெற்ற மாணவர்களை பாராட்டி கௌரவித்து நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை(20) பாலமுனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

பாலமுனை இளைஞர்கள் சபையின் தலைவர், ஆசிரியர் ஏ.எல்.சீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இஸ்லாமிய வரலாற்றுச் சிறப்பு சொற்பொழிவினை பாலமுனை மஹாஸினுல் உலூம் இஸ்லாமிய கல்லூரி அதிபர் அஷ்-ஷெய்க் ஏ.எல்.ஸாஜித் ஹுஸைன் பாகவி, பாலமுனை ஜம்இய்யத்துல் உலமா சபைத் தலைவர் அஷ்-ஷெய்க் ரீ.நிஸ்தார் நஹ்ஜி ஆகியோர் அதிதிகளினால் கௌரவித்து நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டனர்.

மேலும், இந்நிகழ்வின் அதிதிகளாக பாலமுனை இளைஞர்கள் சபையின் ஆலோசகர்களான அக்கரைப்பற்று சட்டவைத்திய அதிகாரி எஸ்.எம்.றிபாஸ்தீன், தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஏ.எச்.றிபாஸ், பாலமுனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவர் யூ.எல்.ஏ.லத்திப், இளைஞர் சபையின் பொதுச் செயலாளர் ஆர்.எம்.சாமில் ஆசிரியர், அமைப்பாளர் எம்.ஏ.சிபான் உட்பட நிர்வாக உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புனித ரமழான் மாதத்தில் தராவிஹ் மற்றும் ஏனைய தொழுகையினை விடாது தொடராக பேணிவந்த மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பாலமுனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவரினால் மாணவன் சலாகுதீன் சம்திக்கு விசேட பரிசு வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.



பட்டிருப்பு கல்வி வலயம் மண்டூர் 13ஆம் கொலணி விக்னேஸ்வரா மகா வித்தியாலய மாணவி ஜெ.திலோஜா கல்வியமைச்சினால் நடத்தப்பட்ட சமூக விஞ்ஞானப்போட்டியில் பங்குபற்றி தேசியரீதியில் முதலாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கும் பெற்றோர்களுக்கும் பெருமை சேர்த்துள்ளதாக அதிபர் ரீ.சபேசன் தெரிவித்தார். (வெல்லாவெளி செய்தியாளர்)

## விபத்தில் சிக்கிய இளைஞனின் உடல் உறுப்புகள் தானம்

### குடும்பத்திலுள்ளோரும் தமது அவயவங்களைத் தானம் செய்வதில் ஆர்வம்

(மண்முனை, கல்லடி செய்தியாளர்கள்)



வீதி விபத்தில் உயிரிழந்த இளைஞனின் உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்ட நெகிழ்ச்சிச் சம்பவம் மட்டக்களப்பு சித்தாண்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கிரான் பகுதியிலிருந்து சித்தாண்டியிலுள்ள தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது பிரதான வீதியில் கிரானுக்கும் சித்தாண்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்ட விபத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான இந்திரசேன ரேனுஜன் (வயது 29) படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

இவ்விபத்து சம்பவம் வெள்ளிக்கிழமை(21) இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தின்போது படுகாயடைந்த அவர், மூளைச் சாவு அடைந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்ததையடுத்து, வைத்தியர்களின் ஆலோசனையுடன் அவரது உடலுறுப்புகளை தானம் செய்ய குடும்பத்தினர் முன்வந்துள்ளனர்.

அதனடிப்படையில், மூளைச் சாவடைந்த ரேனுஜனின் சிறுநீரகங்கள், கல்லீரல், நுரையீரல், இதயம் ஆகிய அவயவங்கள் தேவையுடையோருக்கு பொருத்தும் வகையில் தானம் செய்யப்பட்டது. தமது சகோதரனை இழந்தது ஆறாத் துயரமாக இருந்தபோதிலும் அவரது உடல் உறுப்புகள் 5 பேருக்கு வாழ்வளிக்கும் என்பதையிட்டு எனது சகோதரன் சாகாவரம் பெற்றுள்ளதாக நினைத்தே நாம் பெருமையடைகின்றோம் என அவரது சகோதரி கிரிஷாந்தினி தெரிவித்தார்.

அத்துடன், இதுபோன்று உடலுறுப்புகளைத் தானம் செய்ய தாமும் தமது குடும்பத்தவர்களும் சித்தமாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இதனிடையே எப்போதும் பொது நலனில் அக்கறைகொண்டுள்ள கிரிஷாந்தினி, கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இரத்ததானம் செய்து வருவதையும் சுட்டிக்காட்டினார்.

ரேனுஜனின் உடல் அதிகளவானோரின் பங்கேற்புடன் சனிக்கிழமை(22) சித்தாண்டியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிளைச் செலுத்திய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.





மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவர்களின் கைவினை செயற்பாட்டு ஆக்கத்திறன் கண்காட்சியானது மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அதிபர் இராசதுரை பாஸ்கரின் வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளுக்கமைய திங்கட்கிழமை(24) கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர் கே.லோரன்ஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பகுதித்தலைவர் ச.சிற்சபேசன், ஆசிரியர்களான நளினி சதாசிவம், சசிகலா கந்தசாமி, யசோ விநாயகமூர்த்தி, துரைசாமி சுரேஸ்குமார் உட்பட பெற்றோர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். (வெல்லாவெளி செய்தியாளர்)

# இன்று 13ஆவது நாளாகவும் தொடரும் உள்நாட்டுப் போர்:

# சூடான் இராணுவத் தாக்குதலில் பொதுமக்கள் 413 பேர் உயிரிழப்பு; 3,551 பேர் படுகாயம்

## • ஆபத்தில் 50 ஆயிரம் குழந்தைகள்

## • 28 நாடுகளைச் சேர்ந்த 388 பேரை மீட்டது பிரான்ஸ்



சூடான் உள்நாட்டுப் போர் இன்று 13ஆவது நாளாகவும் நீடித்து இடம்பெற்றுவரும் நிலையில், அங்கு சிக்கியிருந்த 28 நாடுகளைச் சேர்ந்த 388 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த 12 நாட்களாக இராணுவம் மற்றும் துணை இராணுவத்திற்கு இடையே நடைபெறும் மோதலில் அப்பாவி பொதுமக்கள் 413 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 3,551 பேர் படுகாயமடைந்துள்ளனர். அத்தோடு, 50 ஆயிரம் குழந்தைகள் ஆபத்தில் இருப்பாக உலக சுகாதார அமைப்பின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அனைத்து நாடுகளும் தங்களது மக்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நிலையில், அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் தங்களது தூதரக அதிகாரிகளைப் பாதுகாப்பாக வெளியேற்றியுள்ளன. அதேபோல், நேற்று முன்தினம் இரவு இந்தியர்கள் உட்பட 388 பேரை இரண்டு இராணுவ விமானங்கள் மூலம் பத்திரமாக மீட்டதாக இந்தியாவிலுள்ள பிரான்ஸ் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேபோன்று சவூதி அரேபியாவும் 3 இந்தியர்கள் உட்பட நட்பு நாடுகளைச் சேர்ந்த 66 பேரை மீட்டுள்ளது. ஜேர்மனி, இத்தாலி, கனடா, ஸ்பெயின் உட்பட பல நாடுகள் தங்களது அதிகாரிகள் மற்றும் குடிமக்களை மீட்டு வருகின்றன.

**413 பேர் பலி; 3,551 பேர் படுகாயம்**

சூடான் இராணுவத்துக்கும், துணை இராணுவ ஆதரவு படையினருக்கும் இடையே கடந்த சில நாட்களாக மோதல் ஏற்பட்டு கடும் துப்பாக்கிச்சூடு மற்றும் கலவரங்கள் நடந்து வருகின்றன. ஹெலிகொப்டர்கள் மூலமும் பயங்கரமாக தாக்குதல் நடந்து வருவதால் சூடான் முழுவதும் பபரபரப்பான சூழல் நிலவுகிறது. இந்த மோதலால் உயிரிழப்புகளும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

இதுவரை 413 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 3,551 பேர் படுகாயமடைந்திருப்பதாகவும் சூடான் அரசு அறிவித்துள்ளது. இறந்தவர்களில் 9 குழந்தைகளும் அடங்கும். தாக்குதலால் குறிப்பாக, மருத்துவமனைகள் மூடப்பட்டுள்ளன.

இதனால், மக்கள் சிகிச்சை பெறமுடியாமல் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். சூடானில் ஒவ்வொரு நாளும் அதிகரித்துவரும் மோதலுக்கு மத்தியில், உலகெங்கிலும் உள்ள நாடுகள் அங்கு சிக்கித் தவிக்கும் தமது குடிமக்களை மீட்பதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளன.

**28 நாடுகளைச் சேர்ந்த 388 பேர் மீட்பு**

அந்த வகையில், சூடானிலிருந்து இந்தியர்கள் உட்பட 388 பேர் வெளியேற்றப்பட்டதாக இந்தியாவிலுள்ள பிரான்ஸ் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இந்தியாவிலுள்ள பிரான்ஸ் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பிரெஞ்சு வெளியேற்றும் நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. நேற்று இரவு, இரண்டு இராணுவ விமானங்களில் சுழற்சி முறையில் இந்தியப் பிரஜைகள் உட்பட 28 நாடுகளைச் சேர்ந்த 388 பேர் வெளியேற்றப்பட்டனர்" என்று தெரிவித்துள்ளது.

**ஆபத்தில் 50 ஆயிரம் குழந்தைகள்**

இது குறித்து உலக சுகாதார அமைப்பின் செய்தித் தொடர்பாளர் மார்கரெட் ஹரிஸ் (Margaret Harris) தெரிவிக்கையில், "நாட்டின் இராணுவத்துக்கும், துணை இராணுவத்துக்குமிடையே நடந்துவரும் மோதல்களின் ஒரு பகுதியே இந்தப் போர்.

ஏப்ரல் 15ஆம் திகதிமுதல் இதுவரை சுகாதார உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்டவை மீது 11 தாக்குதல்கள் நடந்திருக்கின்றன. சூடானிலுள்ள சுகாதார அமைச்சின் தகவலின்படி, இந்தப் போரால் 20 சுகாதார அமைப்புகளின் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன், 12 சுகாதார அமைப்புகளின் பணிகள் நிறுத்தப்படும் அபாயத்திலுள்ளன.

எனவே, போரால் பாதிக்கப்பட்ட மக்கள் மட்டுமல்ல, தொடர்ந்து சிகிச்சை தேவைப்படுபவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். உணவு, தண்ணீர், மருந்து ஆகியவை தீர்ந்துகொண்டிருக்கின்றன. ஏற்கனவே உலகின் மிக அதிகமான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகள் வாழும் நாடுகளில் ஒன்று சூடான்.

தற்போது சுமார் 50,000 குழந்தைகள் ஆபத்தில் இருக்கும் சூழ்நிலையே ஏற்பட்டிருக்கிறது. இதை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்'' எனத் தெரிவித்திருக்கிறார்.

உலக செய்திகள்

# கென்யாவில் தோண்டத் தோண்ட மீட்கப்படும் சடலங்கள்;

## 800 ஏக்கர் வனப்பகுதிக்கு சீல்!

கென்யாவில் கடவுளை காண்பதற்காக பட்டினியால் உயிரிழந்தவர்களில் 73 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், மேலும் 112 பேர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அங்கு தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் 800 ஏக்கர் நிலப்பகுதிக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு அந்நாட்டு ஜனாதிபதி வில்லியம் ரூடோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "இது மிகக் கொடூரமான விடயம். பட்டினி போட்டு கொல்வதென்பது பயங்கரவாதத் தாக்குதலுக்கு இணையானது. இந்தச் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குற்றவாளிக்கு கடுமையான தண்டனை கிடைப்பதை உறுதிசெய்வோம்'' எனத் தெரிவித்துள்ளார்.

கென்யாவின் கடலோர நகரமான மலிண்டியையொட்டிய ஷகாகோலா வனப் பகுதியில் சிலரது உடல்கள் புதைந்து கிடப்பதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அங்கு மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் தோண்டத் தோண்ட 47 சடலங்கள் எடுக்கப்பட்டன. இதுதொடர்பாக தேவாலய போதகர் போல் மெக்கன்சி என்பவரை பொலிஸார் கைதுசெய்து விசாரித்தபோது சொர்க்கத்திற்கு போக வேண்டும் என்றால் பட்டினி கிடக்கும்படி மக்களிடம் கூறியுள்ளார். அவர்களும் அதனை உண்மை என நம்பி சொர்க்கத்திற்கு செல்ல பட்டினியாக கிடந்துள்ளனர். அவர்களில் 73 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. எலும்பும் தோலுமாக இருந்த 15 பேரை மீட்டு காப்பாற்றியுள்ளனர். இதில், 4 பேர் சிகிச்சைக்காக கொண்டுசெல்லும்போது உயிரிழந்துள்ளனர்.

இதுதொடர்பான விசாரணையில் போல் மெக்கன்சி சாப்பிடவோ அல்லது குடிக்கவோ மறுத்துவிட்டார். இந்தச் சம்பவம் கென்யாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து சர்வதேச கிறிஸ்தவ ஆலயம் இருந்த 800 ஏக்கர் வனப் பகுதி முழுவதும் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

# 7.3 ரிச்டரில் அதிர்ந்த இந்தோனேசியா

## சுனாமி எச்சரிக்கையால் மக்கள் பீதி

இந்தோனேசியாவில் நேற்று 7.3 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. சுமத்ரா தீவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் உடனடியாக சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது. இதனால் மக்கள் மத்தியில் பீதி ஏற்படது. மக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு உள்ளூர் அதிகாரிகள் எச்சரித்திருந்தனர். எனினும், இரண்டு மணிநேரம் கழித்து சுனாமி எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டுள்ளது.

**மலேஷியா - பங்களாதேஷிலும் அதிர்வு**

இதேவேளை, பங்களாதேஷ் தலைநகர் டாக்கா அருகே 4 ரிச்டர் அளவில் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. டாக்காவிலிருந்து 21 கிலோமீற்றர் தொலைவில் நள்ளிரவு 1.45 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதேபோன்று மலேஷிய தலைநகர் கோலாலம்பூர் அருகே நேற்றுமுன்தினம் நள்ளிரவு 1.30 மணியளவில் 6.7 ரிச்டர் அளவில் பலத்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

# சச்சின், லாராவை கௌரவித்த சிட்னி கிரிக்கெட் மைதானம்




கிரிக்கெட்டில் வரலாற்றில் பல சாதனைகளை படைத்த மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் வீரர் பிரயன் லாராவையும், இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின் டெண்டுல்கரையும் அவுஸ்திரேலியாவின் சிட்னி கிரிக்கெட் மைதானம் கௌரவித்துள்ளது.

சிட்னி மைதானத்தில் நடைபெற்ற லாரா - டெண்டுல்கர் கேட் திறப்பு விழாவில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் நிர்வாகிகள் கலந்துகொண்டனர். சச்சின் மற்றும் லாராவின் நினைவாக மைதானத்தின் வாயிலுக்கு இருவரது பெயரும் சூட்டப்பட்டுள்ளது. இந்த வாயிலை கடந்துதான் ஆடுகளத்துக்குள் போட்டியில் பங்கு பெறும் அணியின் வீரர்கள் செல்ல முடியும் என சிட்னி மைதானத்தின் நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது.

லாரா மற்றும் சச்சினின் கிரிக்கெட் கேரியரில் சிட்னி கிரிக்கெட் மைதானத்திற்கு பிரத்தியேக இடமுள்ளது. லாரா, தனது முதல் டெஸ்ட் கிரிக்கெட் சதத்தை சிட்னி மைதானத்தில் பதிவு செய்திருக்கிறார்.

# முதல் இன்னிங்ஸில் 500 ஓட்டங்களை நெருங்கிய அயர்லாந்து




இலங்கை அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் அயர்லாந்து அணி 492 ஓட்டங்களைக் குவிக்க, பதிலுக்கு துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி 411 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது.

அயர்லாந்து கிரிக்கெட் அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து கிடைத்து முதல் முறையாக இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுதற்காக இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. அந்த வகையில் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வரலாற்றுச் சாதனையுடன் அபார வெற்றியீட்டியது.

இந்நிலையில், இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி காலியில் நேற்று முன்தினம் முதல் நடைபெற்று வருகிறது. அதன்படி நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய அயர்லாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி முதல் இன்னிங்ஸில் இரு சதங்கள் மற்றும் இரு அரைச்சதங்களின் உதவியுடன் மொத்தமாக 492 ஓட்டங்களைக் குவித்தது. பந்துவீச்சில் பிரபாத் ஜயசூரிய 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி நேற்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 81 ஓட்டங்களைக் குவித்திருந்தது. இன்று போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டம் தொடர்கிறது.

TATA IPL

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 36
பெங்களூர் எதிர் கொல்கத்தா
நேரம் - இரவு 7.30
இடம் - பெங்களூர்

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# ஆரையூர் விளையாட்டுக் கழகத்தின் புதுவருட சித்திரை விளையாட்டு விழா





*(கல்லடி செய்தியாளர்)*

ஆரையூர் விளையாட்டுக் கழகத்தின் புதுவருட சித்திரை விளையாட்டு விழா விளையாட்டுக் கழகத்தின் உப தலைவர் சண்முகராசா பிரதீப் தலைமையில் அண்மையில் ஆரையூர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில். பிரதம அதிதியாக மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி நமசிவாயம் சத்தியானந்தி கலந்துகொண்டு சிறப்பித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பழமையான விளையாட்டுக் கழகங்களில் ஒன்றான ஆரையூர் விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த சித்திரைப் புதுவருட கலாசார விளையாட்டு நிகழ்வில் மரதன் ஓட்டம், தோணி ஓட்டம், பெண்களுக்கான சமநிலை ஓட்டம், ஆண்களுக்கான சமநிலை ஓட்டம், யானைக்கு கண் வைத்தல், தலையணைச் சமர், முட்டி உடைத்தல், கிடுகு பின்னுதல், கயிறு இழுத்தல் போன்ற பாரம்பரிய விளையாட்டுகளுடன் வினோத உடைப்போட்டி, தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தல் மற்றும் அப்பிள் உண்ணுதல் போன்ற விளையாட்டுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய பிரதமகுரு சோதிநாதக்குருக்கள், ஆரையம்பதி அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஸ்ரீ கண்ணகி ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயங்களின் பரிபாலன சபைத் தலைவர் கே.மனோராஜ் மற்றும் பிரதேச மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கான இந்திய குழாம் அறிவிப்பு

ஜூன் மாதம் 7ஆம் திகதி லண்டனில் ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கான இந்திய குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியா - இந்தியா மோதுகிறது. ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணியில் சுப்மான் கில், புஜாரா, விராட் கோஹ்லி, ராகுல், அஸ்வின், பரத், ரஹானே, ஜடேஜா, அக்சர் பட்டேட, ஷர்துல் தாக்கூர், முகமது ஷமி, முகமது சிராஜ், உமேஷ் யாதவ் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

இதில் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு டெஸ்ட் அணியில் அனுபவ வீரரான ஜின்கியா ரஹானே சேர்க்கப்பட்டுள்ளார். காயத்தால் அவதிப்படும் பும்ரா, ஸ்ரேயர்ஸ் அய்யர் ஆகியோர் அணியில் இடம்பெறவில்லை.

# செஸ் சம்பியனாக முடிசூடிய தெஹாஷ் கிரிங்கொட



கிரீஸில் நடைபெற்ற உலக பாடசாலை செஸ் சம்பியன்ஷிப் தொடரின் 19 வயதின் கீழ் திறந்த சுற்றுப்போட்டியில் 41 போட்டியாளர்களில் இலங்கையைச் சேர்ந்த தெஹாஷ் ரித்மித கிரிங்கொட சம்பியனாக முடிசூடியுள்ளார்.

சுவிஸ் முறைமையில் ஒன்பது சுற்றுகளாக நடைபெற்ற இந்த செஸ் தொடரில் நேரக் கட்டுப்பாடாக 90 நிமிடங்கள் மற்றும் 30 செக்கன்கள் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. கொழும்பு ஆனந்த கல்லூரியில் கல்வி கற்றுவரும் தெஹாஷ், 9 புள்ளிகளில் 7.5 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை தக்கவைத்திருந்தார். தொடரின் இரண்டாம் மற்றும் மூன்றாவது இடங்களை முறையே கசகஸ்தானைச் சேர்ந்த அலிம்சான் ஷாவுன்பெய் மற்றும் எய்சுல்தான் பிசாலியாவ் ஆகியோர் பிடித்துக்கொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7